Regd. No. M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 ஈரோடு 17-7-1948 சனிக்கிழமை மலர் 45.

## செத்த பாம்பு!

"பாம்பாட்டிச் சித்தன்"

★

அரசியல் மோடிவித்தை ஆடும் வீரர்
ஆச்சாரி இந்தியெனும் நல்ல பாம்பை
முரசுகொட்டி ஆடவிட்டார் தமிழர் முன்னால்
முன்னொருநாள் இந்தவித்தை காட்டும்போது,
குறிசொல்லில் கைதேர்ந்த பெருந்தலைவர்
குவலயத்தோர் வாழ்க்கைநலன் தன்னதென்று
முரசுகொட்டும் பெரியாராம் ராமசாமி
முன்வந்து எதிர்ப்பென்னும் மகுடிகொண்டு,
விரைந்தூத நச்சரவம் படமொடுங்கி
நினைவிழந்து உயிரிழந்து நெடுமரம்போல்
தரையினிலே விழுமுன்னம் இரண்டுயிரை
தான்குடித்து மாண்டகதை மறக்காமுன்னம்,
விரைந்துவந்து செத்தஅதை உயிருண்டாக்க
வீண்முயற்சி செய்கின்றார் அவனாசியார்
பருந்துவடி வாகிஇன்று பாய்ந்துகொத்திப்
பன்னூறாய் பிய்த்தெறிவோம் வாரீர்வாரீர்!!

பெண்கள் பகுதி:

# ஆணும் ஓர் ஆரியமே!

"தோழியர் சந்தனாதேவி"

"கடவுள் கேட்டான். கணவன் காணிக்கை கொடுத்தான் மனைவியை"

—இயற்பகை.

"தாய் ஆணையிட்டாள் தனயருக்கு, அய்வருக்கு மனைவியானாள்"

—பாரதம்.

"மனைவி மாசுள்ளவள் என சந்தேகித்தான், ஆண்டவனவதாரம் இராமன்—காட்டிற்குத்துரத்தினான்"

—இராமாயணம்.

இவை படித்தோம்—கேட்டோம்! மகிழ்ந்தோம்—சிந்திக்கவில்லை. புகழ்ந்தோம்—புரிந்தோர் சிலர். உணர்ந்தோர் கூறினர், உணர் விழந்தோர் ஒப்பவில்லை. எதிர்த்தனர். ஆயினும் சிந்தித்தோர் கூறினர்—கூறுகின்றனர்.

கடவுள் கேட்டான் பெண்ணை. பக்தன் கொடுத்தான் மனைவியை. அருமையான கதை! என்ன பக்தி!! ஆண்டவன் சோதனைதான் எவ்வளவு அறிவுள்ளது?!!!

கடவுள் கேட்டான் மனைவியை பக்தனிடம். ஆண்டவனுக்குத் தெரியும் பக்தன் கொடுப்பான் என்று! தெரிந்தும் சோதனை செய்து பக்தியை அம்பலப்படுத்தினானாம்! பெண் ஆணின் அடிமை—பொம்மையல்லவா? கிடைக்காது என்ன செய்யும்!!

ஆணின் ஆணைப்பிற்கு, காதலன் காமத்திற்கு, மூர்க்கனின் முத்தத்திற்கல்லவா பெண் படைக்கப்பட்டிருக்கிறாள்?(!!) ஆம்! இதுதான் இன்றுவரையுள்ள எண்ணம். பெண் ஆணின் போகக் களம்! களத்திலே மடியும்—மடிந்த அடிமையைப் பற்றிக் கவலை என்ன? அடுத்த—ஒன்று கிடைக்கும்!! கவலை ஏன்? "கொண்டைக்காரி போனால், ஜடைக்காரி வருகிறாள்." இது தான் எண்ணம்—செயல்!

இது ஆணிடத்திடமட்டுமல்ல பெண்களிடமும் உண்டு! இதோ சாட்சி, கொஞ்சம் பாருங்கள் தோழியரே!

பெண் ஒருத்தி! தாய் ஆணையிட்டாள் தனயருக்கு! அய்வர் மணந்தனர்—போகித்தனர், ஒரு பெண்ணை!

கொடி ஒரு கொம்பைத்தான் படரும்—இயற்கை. பல கொம்பில் படரச்செய்து பந்தலாக்கலாம்—செயற்கை. கன்னி ஒருத்தி ஒரு காதலனைத்தான் விரும்புவாள். இது இயற்கை! பல்லோரை விரும்பாள் விபசாரிகூட இயற்கையில்! பலரை நாடச் செய்வது சமுதாயம்—செயற்கையில்.

பணத்திற்குச்செல்லும் பரத்தையர் உள்ளம் கூட நாடாது பலரை! ஏதோ இல்லாத ஒன்றை நிவர்த்திக்கப்பலருடன் படுப்பதால், பரத்தையர் உள்ளம் பலரை நாடுகிறது என்று கொள்வது தவறு! இயற்கையில் அது முடியாத காரியம். பல பிள்ளையோடு வாழும் தாய்க்கு (தந்தைக்கும் கூட) எல்லாக் குழந்தையிடமும் அன்பிருந்தாலும், தனிப்பட்ட ஒரு குழந்தையிடம் மட்டும் முழு (அதிக) அன்பு இருக்கக் காரணம் என்ன? பலரிடம் உள்ளம் பிரேமை கொள்ளும் என்பது அபத்தம். முடியாது. காமத்திற்கு (உடலிச்சைக்காக) பலரிடம் காதல் செய்யும் ஆணுள்ளத்திலும், ஒரே காதலிக்குத் தான் அன்பு—காதல் இருக்க இயலும். இதுதான் இயற்கை!

வெற்றியிலே கொண்டு வந்த ஒல்லிடையாளை, அய்வர் பகிர்ந்துண்ண ஆணையிட்டாள் அன்னை! அன்னையும் பெண், அந்த ஒல்லிடையாளும் பெண். பெண், பெண்ணுள்ளத்தை அறியாதிருத்தல்இயலாது. என்றாலும் ஆணையிட்டாள் அன்னை, அய்வருடன் அணைந்து கொள்ள! ஏன்? பெண்மையும் தாய்மையுமுள்ள அன்னை, அதே பண்புடையவளுக்கு ஆணையிட்டாள்! ஏன்? தோழியரே சிந்திக்க வேண்டும்!

பெண்ணிடமும், பெண் அடிமை என்ற எண்ணம் இருந்தால் தானே, துரௌபதையைக் குந்தி அவ்விதம் நடத்த வழியும் எண்ணமும் இருந்தது. தோழியரே மறைக்க வேண்டாம், மறக்க வேண்டாம்! சிந்தித்துப் பாருங்கள்!

இது ஆணும் பெண்ணுமான மக்களோடு ஒழிந்ததா? இல்லையே! ஆண்டவனிடமும்அமைந்தல்லவா போனது! இதோ கொஞ்சம் பாருங்கள்.

"மனைவி மாசுள்ளவள் என்று எண்ணினான், மக்களை இரட்சிக்கும் மகாவிஷ்ணு அவதாரமாம் இராமன். கர்ப்பம் தரித்த சீதையைக் கானகத்திற்குத் துரத்தினான்?" ஏன்? ஆண்டவனும் அறிந்திருக்கிறான். பெண்ணை—மனைவியை ஆட்டிப்படைக்கலாமென்று.

விஷ்ணுவிற்குப் பலதாரமிருந்தாலும், சீதைக்கு கட்டுப்பாடு அமைத்தான். ஏன்? ஆண்டவனுக்கும் ஓர வஞ்சனையா? தோழியரே! உங்களையே நீங்கள் கேட்டுப்பாருங்கள். 'இவையெல்லாம் உண்மையான ஆண்டவன் நிகழ்ச்சியா'? என்று.

ஆண்டவனுக்கு ஓரவஞ்சனையுமில்லை; அன்னைக்கு சதியுமில்லை. ஆணினத்தின் ஆணவம் தான் இது! ஆண்வாடை வீசா அல்லியல்ல நான், இவ்விதம் கூற! என் காதலரின் அன்பை நாடுபவள் தான். ஆனாலும் ஆண் ஓர் ஆரியம் என்றே கூறுகிறேன். கோபம் வேண்டாம் சிந்தியுங்கள் தோழியர்களே!

ஆரியம் இன்று ஏற்பட்டதல்ல. பன்னூற்றாண்டிற்கு முன் ஏற்பட்டது. வழி வழி வந்த ஆரியத்தைத்தான், ஆணவம் பிடித்த பார்ப்பனர் பின்பற்றுகின்றனர். ஆரியத்தை நிலைநாட்ட ஆண்டவன் கதையைக் கதைக்கின்றனர், ஆரியர் உண்மையை மறைத்துவிட. ஆண் என்ற அகந்தையை விடமறுக்கும் ஆணினம் ஆண்டவன் பேரில் கதையெழுதி, ஆண்டவன் கூடப்பெண்ணை இப்படித்தான் அடிமையாக நடத்தினான், அதை மாற்ற முடியாது என்று அறை கூவுகின்றனர், பத்தாம் பசலிகள். பயத்தினால் எங்கே உண்மை வெளியாகி விடுமோ என்று எண்ணியே இப்படிப்பட்ட ஆண்டவன் புளுகுக் கதை இயற்றினர்.

காலப்போக்கிற்கு தலைகுனியா பார்ப்பனீயத்தைஎதிர்க்கின்றோம். இயற்கை. பிறர் பண்பை அடிமைப் படுத்தல் தவறு! அடிமைத்

# காலம் வரவரக் கெட்டுப் போச்சா?

★

யாரோ பெரியவர்கள் எப்போதோ சொல்லிவிட்டுப் போனதாகச் சொல்லப்படும் சில வார்த்தைகள் பல பேர் வாய்மூலம் "பராட்காஸ்ட்" செய்யப்பட்டு வருவதால், பழமொழிகளாகிப் பாமரஜனங்களால்யோசனையின்றிஒப்புக் கொள்ளப்பட்டு வருகின்றன. மூடப் பழக்கங்களிலிருந்து பாமர மக்களை விடுவிக்கச் செய்யப்படும் முன்னேற்ற முயற்சிகளுக்கெல்லாம் முட்டுக்கட்டையாக இருக்கும் பழமைப் பித்தர்களுக்கும், தன் அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் மனமுயற்சியை விரும்பாத சோம்பேறி மைனர்களுக்கும், இப்'பழமொழி'களும், பெரியோர் வாக்கு'களும், "வெகுஜனவாக்கியங்களும்" சிறந்த 'வாய்ப்பாணங்'களாக உதவுகின்றன. எந்த ஒரு காப்பிக் கடையிலோ, அல்லது படித்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் கூடிக் களிக்கிற கிளப்புகளிலோ, கொஞ்சம் கவனித்து கேட்போமானால், அங்கே நடக்கிற சம்பாஷணைகளிலிருந்தும், அப்போது சரமாரியாக வழங்கப்படுகிற பழமொழிகளிலிருந்தும் மேற்படி பழமொழிகள் எவ்வளவு அபத்தமானவை யென்பதும், அவற்றை யோசனையின்றிப்பிதற்றும் 'பெரிய தம்பி'களின் முட்டாள் தனம் எவ்வளவு பரிதபிக்கத்தக்கது என்பதும் விளங்காமல் போகாது.

## கலியின் மகத்துவம்.

சர்வசாதாரணமாக எல்லோராலும் எல்லாச்சந்தர்ப்பத்திலும் சொல்லப்படுகிற வார்த்தைகள் "காலம் வரவரக் கெட்டுப்போச்சு" . எல்லாங்கலிகாலக் கொடுமை" என்பவைகளாம். கலியின் தலையில் சுமத்தப்படுகிற பொறுப்பு கொஞ்ச நஞ்சமல்ல!

பார்வைக்குறைவை நிவர்த்தி செய்து கொள்ள மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்ட பேரப்பிள்ளையைப் பார்த்து "நான் கண்டதில்லை, இந்தவயசிலே கண்ணாடி போட்டதே எல்லாங்கலிகாலம்!" என்கிறாள் பாட்டி.

மகனுடன் பேசிக்கொண்டிருக்கிற மருமகளைப் பார்த்து, "என்ன கூத்தாயிருக்கு பெண்டாட்டியை யோசனை கேக்கற காலமாயிருக்குது. காலம் சுத்தமாக்கெட்டுப் போச்சு!" என்கிறாள் மாமியார்.

பள்ளிக்கூடம் போகிற வாத்தியாரம்மாள் குடை பிடித்துக்கொண்டு போவதைக்கண்டு ஆச்சரியமடைந்து, "என்ன கலிகாலமாயிருக்குது. பொம்பளெகுடைப்பிடிக்கிறா" என்று சொல்லுகிறான் பட்டிக்காட்டுப் பெரியதம்பி.

சைகிளில் சவாரி செய்துகொண்டு போகிற ஒரு பெண்ணைப் பார்த்து "காலம் கலிகாலம்! பொட்டச்சியெல்லாம் சைகிள் விடறபோது மழையெப்படிப் பேயும்?" என்கிறான் கடைவீதி கருப்பணன்.

ஆதிதிராவிடர் ஒருவர் தாசில்தாராக வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு, "காலம் கலிகாலமல்லவா? தாசில்தாரனா, கலெக்டராகக்கூட வருவான் பறையன்" என்று பெருமூச்சு விடுகிறான் அக்கிரார சுப்பய்யன்.

இவ்வாறே இன்னும் அநேக சந்தர்ப்பங்களிலும், கலிகாலத்தின் சக்தியைப் பற்றிப் பேசப்படுவது வழக்கமாயிருக்கிறது. மாமூலுக்கு விரோதமாக என்ன நடந்தாலும், என்ன ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் கலிகால விபரீதக் கணக்கில் பதிந்து, எளிதாக இழிவுபடுத்தி விடலாமென்று நம்பியிருக்கிறான் பழமைப் பித்தன். பழமையின் கொடுமையை அறிந்தும், "நடக்கிறபடி நடக்கட்டும் நமக்கென்ன போகிறது" என்கிற சோம்பேறியும் மாறுதலின் இயற்கைத் தன்மையையும், அவசியத்தையும், நியாயத்தையும், புதுமையின் பெருமையையும், நன்மையையும், அறிந்தும், சுயநலங் காரணமாக, ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாத சுகஜீவனக்காரனும், பழமைப்பித்தனுடன் சேர்ந்துகொண்டு "இந்நாளிற் கலிபுருடன் இயற்றுவதெல்லாங் கொடுமை, ஆகையால் இருந்தபடியிருப்போம்" என்று கூச்சல் போடுகிறார்கள்.

"இயற்கையில் எதுவு‍ம் இருந்தபடி இருக்கமுடியாது. மாறுதல் இயற்கையின் நியதி. இயற்கைக்கு மாறாக இருந்தபடி இருக்க முயற்சிப்பது முட்டாள் தனம்" என்று மறுத்துச் சொன்னால், "இருந்தபடி இருக்க முடியாவிட்டால் பின்னுக்குப்போ முன்னுக்குப்போகாதே! முன்னோர்கள் எப்படியிருந்தார்கள்? அதன்படிநட! பழய நிலைக்குப் போவது தான் முன்னேற்றம்" என்று பெரிய அரசியல் தலைவர் முதல் எல்லோரும் திருப்பிச் சொல்லுகிறார்கள்.

## பின் நோக்கிய முன்னேற்றம்.

பின்னால் திரும்பி முன்னால்போக முயற்சிக்கிற பெரியார்களின் கொள்கைப்படி, ஆதிதிராவிடன் வீரபாகு செய்தபடி கடலையைக் காத்துச் சோற்றுக்குப் பதில் செத்த பிராணிகளைத் தின்னவேண்டும். பெண்கள், "கல் என்றாலுங் கணவன், புல் என்றாலும் புருஷன்" என்கிற பெரியவர் வாக்கின்படி குஷ்டரோகியான புருஷனைக் கூத்தியாள் வீட்டிற்குக் கூடையில் சுமந்துகொண்டு போய்ப் பதிவிரதைப்பட்டம் பெறவேண்டும். 'தாயாரைக்கொன்றுவிட்டுவா' என்று சொன்ன தந்தைசொல் மிக்க மந்திரமில்லை யென்று அந்த க்ஷணமே தாயார் தலையை வெட்டித் தகப்பன் பாதங்களில் வணங்கவேண்டும் தனயன். "அரச குமாரர்களை விட அதிகங் கற்றுக்கொண்டாய். ஆகையால் வேடன் மகனாகிய நீ அவ்வித்தையை உபயோகிக்க முடியாதபடி உன் பெருவிரலைத் துண்டித்து விடு" என்று குரு உத்திரவிட்டால் அதைச் சிரமேற்கொண்டு அந்த நிமிஷமே தன் கட்டை விரலை அரிந்து கொடுக்கவேண்டும் சிஷ்யன். இம்மாதிரியே அரசனுக்குக் குடிகள் அடிமைகளாகவும், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாகவும், பெற்றோருக்குப் பிள்ளைகள் அடிமைகளாகவும், மேல் ஜாதிக்காரனுக்குக் கீழ் ஜாதிக்காரன் அடிமையாகவும் இருப்பதுதான்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

---

தளை முறிக்கப் பார்ப்பனீயத்தை எதிர்க்கிறோம் திராவிடக்கழகத்தால்!

பெண்ணினம் அடிமைப்படுத்தப்பட்டது இன்றல்ல; பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்பு. அடிமைப்படுத்திய ஆணினம் வழிவழியாக அதைக் கைவிடாது, கால மாற்றத்திற்கிசையாது கடைப்பிடித்தது—பிடிக்கின்றது.

ஆரியம் ஏற்றத் தாழ்வையுண்டு பண்ணித் திராவிடத்தைத் தாழ்த்திச் சீரழிக்கின்றது. ஆண்(மை) பெண் என்ற தாழ்வையுண்டுபண்ணிப் பெண்ணினத்தை-சமுதாயத்தை தாழ்வுறச் செய்கிறது. ஆகவே ஆண் என்ற அகந்தையை எதிர்க்க வேண்டும்—ஆண்களையல்ல. திராவிடர்கழகம்—சுயமரியாதை இயக்கம் பெண்ணுரிமைக்கு உண்மையாகப் பாடுபடுகிறது! அதைப்பயன் படுத்திக் கொள்வோம் வாரீர் தோழியரே!

தாழ்வுற்ற திராவிடத்தைத்தலை தூக்க முரசு முழங்கிவிட்டது. ஆரியத்தை அழித் தொழிக்க தூத்துக்குடியில் இருலட்சம்கூடி விட்டது. ஆண் என்ற அகந்தையை அழித்தொழிக்க-முரசும் கொட்ட, நாம் என்று கூடுவது? தோழியர்களே! நீங்களே விடையளியுங்கள்!

# சாவே வா!

அறியாமை நிறைந்த நாட்டில் அடிமைகளாகக் கொடுங்கோலர்களின் ஆட்சியில் நடைப் பிணங்களாக நாம் வாழ விரும்பவில்லை! சாவைத்தான் விரும்புகிறோம்! சாவே வா! என்று அழைக்கின்றோம்.

வறண்ட வாழ்வில் ஏழ்மை, இல்லாமை என்கின்ற இரு உருளைகளின் இடையில் அகப்பட்டு நசுக்குண்டு, தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கும் நாம் விடுதலைப் போராட்டத்தில் வீரனாக உயிர் விட அஞ்சமாட்டோம். தயங்காமல் சாவை வரவேற்போம்!

இளைஞர்களே வாழத்தான் பிறந்தோம்! வஞ்சகர்களின் சூழ்ச்சியால் வாழ்வின் வளங்கள் பறிக்கப்பட்டு, இளமையில் இன்னலால் இடர்ப்பட்டு, ஒடிந்த உள்ளத்துடன் வாழ்வதை நாம் விரும்பவில்லை. வாழ்வைத் திருத்தி அமைக்கவும், வருங்கால மக்கள் வாழ்வில் செழிப்புறவும் இன்று போராடுவோம். வருங்கால நமது சந்ததியார்களுக்கு விடுதலை வாங்கித்தர சாவுநேர்ந்தாலும் கவலையில்லை! சாவை வரவேற்போம்!

வாழ்வு நமக்குக்கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பு. அதை நாட்டு மக்களின் நலத்திற்குப் பயன்படுத்துவோம். அரை வாழ்வில் அவதிப்படும் மக்களுக்கு முழு வாழ்வு பெற்றுத்தரப் போராடுவோம். "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்னை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று பரணி பாடுவோம். வருங்கால மக்கள் வாழ்வில் அமைதிகாண, நாம் சாவில் அமைதியைக் காண்போம்.

நாம் வாழ்வதாக நினைத்துக் கொண்டு செத்துக்கொண்டேயிருக்கிறோம்! மனிதனாகப் பிறந்தும் கொடுங்கோலர்களால் விலங்குகளைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறோம்! உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களை மக்களிடம் கூறவும், உண்மையை உள்ளது உள்ளபடி எழுதவும் உரிமையில்லை. நாயை அடிப்பதுபோல், மனிதன் மனிதனை அடித்து மரத்தில் தூக்கிக் கட்டிவிடுகிறான், கேட்க நாதியில்லை! நாம் இந்த நிலையில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்! இதற்குத்தான் வாழ்வு என்று பெயர்.

அதோ ஏழைப்பாட்டாளியைப் பார்! அவன் பிறந்தது முதல் சாகும்வரை இரவு பகலென்று பாராமல் உழைக்கிறான். ஏன், நாமும் கூடத்தான். ஆனால் நாம் வாழ்வில் அமைதியையோ இன்பத்தையோ கண்டதுண்டா? மற்றொருபுறம் பாருங்கள். உழைக்காமல் ஒரு கூட்டம் உண்டுகொழுத்து உல்லாச வாழ்வு வாழ்கிறது.

பள்ளிக் கூடத்தைப் பார் தோழனே! அங்கு நமது பிள்ளைகள் படிக்கிறார்கள் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆம்! அப்படித்தான் நினைத்திருப்பாய்! இது உண்மை இல்லை. அங்கு படிப்பவர்கள் அத்தனை பேரும் பார்ப்பனர்கள். ஏதோ சில பணக்காரக்குழந்தைகளும் அங்குஉண்டு. நம்மைப் போன்ற ஏழைகளுக்கு அங்கு இடமில்லை. படிப்பதோ பாற்கடலில் பரந்தாமன் பள்ளி கொண்ட கதையும், கம்பனின் கலைக்குதவாக்கவிதைகளும். இது தான் தமிழ்க் கல்வி. பள்ளியில் பகுத்தறிவுக்கிடமில்லை. அறியாமையை அகற்றி, அறிவை விரிவாக்கும் சிந்தனைக்கூடமாக அது திகழவில்லை. பள்ளிகள் கொள்ளைக்காரர்களின் குடியிருப்பு வீடாக இருக்கிறது. ஒரு ஏழை மனிதன் தன்மகனைப் பத்தாவதுவரை படிக்க வைக்க வேண்டுமானால், தன் வீட்டையோ காட்டையோ விற்றால்தான் முடியுமென்றிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். கல்வி அறிவை ஊட்டுவதாகவும், அறியாமையை விரட்டுவதாகவும் இருக்க வேண்டும் என்றும், ஏழை—பணக்காரன்—பார்ப்பான்— என்றில்லாமல் எல்லோரும் படிக்க வசதியுள்ளதாகவும், சந்தர்ப்பமுள்ளதாகவும் மாற்றியமைக்க வேண்டும் என்றும்கூறினால், நாஸ்திகம் என்றும், வகுப்புவாதம் என்றும் நாக்கூசாமல் கூறுகின்றனர் நயவஞ்சகச் சோற்றுப் பிண்டங்கள்.

அரசாங்கப் பணிமனையைப் பாருப்பா, அங்கு அத்தனையும் பார்ப்பன மயம்! இதைப்புள்ளி விபரத்துடன் கூறிவந்த "விடுதலை' பத்திரிகையை ஜாமீன் கட்டச் சொல்கிறது இந்த ஆரிய அடிமை அரசாங்கம். இந்த நிலையில் நாம் வாழ்கிறோம் என்று வெட்கமில்லாமல் கூறுகிறோம்!

அரசியல் சமூக பொருளாதாரத்துறைகளில் நமக்கிருக்கும் அடிமைத்தனத்தை அகற்றவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கையிலேயே, மொழியிலும் நம்மை அடிமைப்படுத்தப் பார்க்கிறது தன்மானமற்ற கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கத்தின் கல்வித் திட்டம்.

இந்திக் கட்டாயப் பாடத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெறாவிட்டால், நாம் வாய் இருந்தும் ஊமையாகத்தான் வாழ நேர்ந்திடும். தாளமுத்து, நடராசன் ஆகியோர் சிந்திய இரத்தமும் செய்த தியாகமும், ஆரியத்தின் பலி பீடத்தில் காவு கொடுக்கப்பட்ட அந்த இரு வீரர்களின் உயிரும் பயனற்றுப் போய்விடும். தமிழனின் வாழ்வும், திராவிடத்தின் வளமும் ஒழிக்கப்பட்டு ஆரியம் வெற்றி முரசு கொட்டிவிடும். இந்த நிலைக்குப் பின் நாம் வாழ்வதா? வாழத்தான் வேண்டுமா?

வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் விழிப்புற்ற இளைஞர்களே! இன்னுயிரையும் என் தமிழ்க்கு ஈந்திடுவோம் என எழுங்கள்! தாளமுத்து நடராசனின் அடிச்சுவட்டைப் பின்பற்றத் தயங்கமாட்டோம் எனக் கூறுங்கள்! தமிழன் தன் தாய் மொழிக்குத் தன்கடமையைச் செய்யத் தவறமாட்டான் என்பதை உணர்த்துங்கள். நாவலர் பாரதியாரின் போர் முரசு உறங்குகின்ற தமிழனது உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஊட்டியிருக்குமென்று நம்புகிறேன். தமிழுடனேயே பிறந்தோம்! தமிழுடனேயே வாழ்ந்தோம். தமிழோடு வாழ்வோம்! தமிழில்லையேல் சாவோம்!

தோழர்களே சிந்தித்துப்பாருங்கள்! வடநாட்டுத் தொடர்பில் திராவிடம் கட்டுப்பட்டுக்கிடக்கிற வரையில் நாம் வாழ்வதாகவே கருத முடியாது! பிறந்த நாட்டிலேயே அடிமையாக உரிமையிழந்து வாழ்வதை வாழ்வு என்று எப்படிக் கூறமுடியும். நாம் இன்று வாழவில்லை! அறிவு கெட்ட அடிமை மக்களின் கூட்டத்திலே

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை முதற்பருவம்.

# மலர்ந்த மலர்.

போட்டி எண் 6.

சகுந்தலா, பெண்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவி. அவள், முள்ளில் ரோஜா, சேற்றில் செந்தார், சித்திரத்தில் வண்ணம், எழிலில் எவரெஸ்ட். 'சிப்பம் பிரித்தெடுத்த சீனத்துப் பதுமை' என வர்ணிப்பவர்கள் அவளைக் கலைக்கண்ணால் கண்டால், வர்ணிக்க வார்த்தையின்றி திண்டாடுவார்கள், "......விரிவுலகில் நீயொருத்தி அழகின் உச்சி" என்று கவியரசர் வர்ணித்திருப்பது அவளைப் பார்த்த பின்தான் என்று தோன்றும்.

வயது சுமார் பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். கண்டோர் கருத்துண்ணக் காத்திருந்த காரிகை. இளமை ததும்பிய அவளின் உடலும், உள்ளமும் எழில் ததும்பிக் காட்சியளித்தன. அவள்தான் பாடிக் கொண்டிருந்தாள், மேடைமீதிருந்து! அந்தப்பாடல் என்னை மகிழ்வித்தது. அது நான் எழுதி வெளியிட்ட பாடல் தான், விதவை மணத்துக்கென!

பெண்கள் மேடைமீதிருந்து பாட ஆரம்பித்து விட்டனர். இந்த நிலை என்று வருமோவென எங்கி வெதும்பிய என் இதயம் மலர்ந்து மணந்தது. இனி நாட்டுக்கு நல்ல காலம்தான் என எண்ணிய நான் இறும்பூதெய்தினேன். அந்தப் பாடலின் எடுப்பை மூன்று தடவை திரும்பத் திரும்பப் பாடினாள்.

"பெண்களே நாட்டின் கண்கள்—
மறுக்கும்
பித்தர் முகம் வெந்தபுண்கள்..."

பாடல் முடிந்தது. அடுத்தபடியாக மதுரைத்தோழர் திரு. பொன்னுச்சாமி அவர்கள், விதவைமணம் விபசாரத்தனமா? என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள் என்று தலைவர் அறிவிக்கவே, நான் மேடைமீது ஏறினேன். அதற்குமுன், நான், எங்கள் கல்லூரியில் நடந்த 'அகாடமி'. வகுப்பில் ஆங்கிலத்திலும், தமிழிலும் சொற்பொழிவாற்றியிருக்கிறேன். அவ்வளவு தான் எனக்கு 'ப்ராக்ட்டீஸ்' அப்போதெல்லாம், பேசவேண்டியவற்றை ஒரு காகிதத்தில் எழுதிவைத்து மனப்பாடம் செய்து கொள்ளுவேன்.

ஒருநாள், பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஏதோ தவறாகப் பேசிவிட்டேன் போலும். சிரிக்கும் பெண்களுடன், இந்த சகுந்தலாகூடச் சிரித்திருக்கிறாள். ஆனால், இன்று நான் திராவிடக்கழகத்தான். மனப்பாடம் செய்து பேசுவதை, புராணப் பிரசங்கமாகக் கருதுகிறவன். கங்கையைப் போல், காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டேன். அதனால் தான் அன்று சிரித்த சகுந்தலா, இன்று தங்கள் சங்கத்திற்பேச அழைத்திருந்தாள்.

பேச்சை முடிக்கும் தறுவாயில் ஒரு 'கல்' வந்து என் தலையில் ராக்கத நர்த்தனம் புரிந்து கீழேவீழ்ந்தது. என்தலையிலிருந்து செங்குருதி பீறிட்டது. உலகம் இருள்வது போல் தெரிந்தது. தன்னைத்தழுவிய சீசாத்தூள், கல், கீழே விழுந்ததைச் சகிக்காத என்தலையும் தரையில் சாய்ந்தது.

நான் கண்விழிக்கும்போது, என் தலையில் பலத்த கட்டு. என் தலைப் பக்கம் என் கல்லூரித் தோழி சகுந்தலா அமர்ந்திருந்தாள். கண்ணீருங் கம்பலையுமாய் உட்கார்ந்திருந்த சகுந்தலா, "இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்று கேட்டாள்.

"தாங்கள் செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்" என்றேன். "நான் செய்தது பேருதவியா? இல்லை உபத்திரவம். மதுரையிலிருந்த உங்களைத் தஞ்சைக்கு அழைத்து வந்து கல்லெறி வாங்கிக் கொடுத்த கொடுமைக்காரி!" என்றாள்.

"எவனோ ஒருவன் எறிந்ததற்காக நீங்கள் ஏன் வருந்த வேண்டும்?" என்று கேட்டேன். "எறிந்தது எவனோ ஒருவனல்ல! என் அண்ணன் தான். உடன் பிறந்த சண்டாளன்" எனக் கண்ணீர் ததும்பக் கூறினாள்.

அவள் கண்களினின்றும் ஒரு துளி வெந்நீர் என் கன்னத்தில் விழுந்தது. "தாங்கள் கழகத்தின் மூலம் நடத்தும் இப்பொதுக்கூட்டத்தில் தங்கள் தமையன் கல்லெறிய வேண்டிய காரணம் விளங்கவில்லையே!" எனக் கேட்டேன்.

"அறியாமைதான் காரணம். வாடாதபூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்த பின்பு விதவை எனக் குற்றஞ் சாட்டப்படுகிறாள். ஆனால் பல்லிழந்த காளையாம் அய்ம்பது வயதுக் கிழவன் தன்மனைவியை இழந்து விட்டாலும் 'விதவன்' என்று குற்றஞ்சாட்டப்படுவதில்லை என்று தாங்கள் கூறினீர்களே, அந்த வார்த்தைதான் அவர் கல்லெறிந்ததற்குக் காரணம். என் அண்ணா மனைவியை இழந்தவர். நான் கணவனை இழந்தவள்—"விதவை" என்று முடித்தாள்.

"தாங்கள் விதவையா? விதவை என்று சொல்லத் தாங்கள் சகிப்பதா? தங்களை விதவை என்று கூறும் வீணர்களுக்கு வெற்றிச் சாவு கொடுப்பதுதான், இனி என் போன்றோர் கடமை. அவள் பார்வை என்னை மீண்டும் பேசவைத்தது. உணர்ச்சி வசப்பட்ட நான், "சகுந்தலா இனி நீ விதவையல்ல! பொன்னுச் சாமியின் இதய ராணி. என் வாழ்வரசி" என்றேன்.

"என் வறண்ட பாலை நிகர் வாழ்வில் அமுத ஊற்றெடுக்கச் செய்த துஷ்யந்தனல்லவா தாங்கள்!" என்று என் முகத்தோடு நிலாமுகத்தைச் சேர்க்க எத்தனித்தாள்.

"ஆத்திரம் அறிவை அபகரித்தது. சாத்திரம் என் பகுத்தறிவைச் சூறையாடியது. ஆத்திகம் என்னை அவதுறுக்குள்ளாக்கியது. நாத்திகம் என்னைப் பகுத்தறிவு வாதியாக மாற்றியது. விதவை மணம் விபசாரத்தனமில்லை. கலப்பு மணம் செய்வதால் நாம் கருகிவிடமாட்டோம். வாழ்க தென்னாட்டு லெனின்! ஓங்குக பகுத்தறிவுச் சமதர்ம ஆட்சி," என்று கூறிக்கொண்டே, சகுந்தலாவின் அண்ணா, மிஸ்டர் ஷண்முகம் எங்களை நோக்கி வந்து, 'தன்னை மன்னிக்கவேண்டும்' என்று கெஞ்சினார்.

"என்று தென்னாட்டுலெனின் பெயரைப் பேசக்கற்றுக் கொண்டீரோ, என்று மெலிடஸ் போன்றோர் நிரம்பிய இடத்திலே, கொள்கைக்காக வாதாடும் திராவிடநாட்டு சாக்ரட்டீஸை—அவர் கொள்கைகளைக் கருத்திலேற்றினீரோ, அன்றே அவரின் மன்னிப்பைப் பெற்று விட்டீர் அண்ணா" என்றாள் என் அருகில் அமர்ந்திருந்த இலக்கியக் காதலி சகுந்தலா!

"விதவைமணம் பற்றிப் பிரச்சாரம் செய்து, விதவை யென்னும் நிலை நாட்டிலேயே இல்லாமல் ஆக்குவதே என் தொண்டு" என்று களிப்புடன் கூறினார் ஷண்முகம்.

"கல்லெறிந்தகரம் கைகூப்பும் எனக் கூறிய பெரியார் ஒரு தத்துவ போதகாசிரியர் என்பதற்கு உன் அண்ணா அழியாச்சான்றாகி விட்டார் சகுந்தலா" என்றேன்.

மிஸ்டர் ஷண்முகம், "இனி சகுந்தலா ஒரு வாடாமலர்" என்றார்

நாடக விமர்சனம்:

# இமயத்தில் நாம்.

★

**நாடகம் நடிப்பவர்கள்:** டி. கே. எஸ் சகோதரர்களின் மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையினர்.

**இடம்:** கோவை ஷண்முகா அரங்கம்.

**கதை எழுதியவர்:** மதுரைத் தோழர் ரா. வெங்கடாசலம் அவர்கள்.

**கதைச் சுருக்கம்.**

தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர்களின் நல்லாட்சி நடைபெற்று வருகிறது. வீரத்தையும், காதலையும் தமிழர்கள் போற்றி வருகின்றனர். வில், கயல், புலிச்சின்னங்கள் இமயத்தின் வெள்ளிப் பனிமலைமேல் பொறிக்கப்பட்டிருக்கிறது.

வடநாட்டில் கனக விஜயன் என்ற ஆரிய மன்னன் ஆட்சி நடத்தி வருகிறான்.

தமிழ் நாட்டில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேர நாட்டை ஆண்டுவருகிறான். வடநாட்டில் ஆரிய மன்னர்களை வென்று தாம்அடைந்த வெற்றியை சேர நாட்டில் வருடா வருடம் திருவிழா கொண்டாடி வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறான் மன்னன் இமயவரம்பன்.

ஆனால், இதைக்கண்டு வடநாட்டில் ஆரிய மன்னன் கனகவிஜயன் மனம் புழுங்குகிறான். தமிழ் மன்னர்களை வெற்றி கொள்ள எண்ணுகிறான். இதற்காகத்தனது மந்திரிகளுடன் ஆலோசிக்கிறான். அவர்கள் சதிகள்—சூழ்ச்சிகள் செய்யத்திட்டம் போடுகிறார்கள். முதலில் ஒரு மந்திரி 'நிமித்திக'னாக சேர மன்னனிடத்தில் வேலைக்கு அமர்கிறான்.

இமயவரம்பனுக்கு செங்குட்டுவன், இளங்கோ என்ற இரு செல்வர்கள் இருக்கின்றனர். அருளிலும், ஆண்மையிலும் ஈடும் எடுப்புமற்றவர்களென வாழ்ந்து வருகின்றனர். செங்குட்டுவன் வேற்று நாட்டுடன் போராடச் சென்றிருக்கிறான். அப்பொழுது சேர நாட்டில் வெற்றிவிழா கொண்டாடப்படுகிறது. பரிசுகள்வழங்கப்படுகின்றன. இச்சமயத்தில் நிமித்திகன் தனது சூழ்ச்சியைத் துவக்குகிறான். நிமித்திகனின் சூழ்ச்சி பலிக்காமல் போய்விடுகிறது. ஆனால் இளங்கோ கானகம் செல்கிறான். தனையனைப் பிரிந்த தந்தையின் உயிர், துக்கத்தால் நீங்குகிறது. செங்குட்டுவன் அரியணை யேறுகிறான். இளங்கோ கானகத்தில் கவிதைகள் புனைகிறான்.

ஒரு நாள், செங்குட்டுவன் மலை வளங்காணச் செல்கிறான். கற்பரசி கண்ணகியின் தெய்வீக மறைவைக் குன்றக்குறவர்கள் மன்னனிடம் கூறுகிறார்கள். அங்கு வந்திருக்கும் சாத்தனார் கண்ணகியின் சரிதையை மன்னனுக்கு விளக்குகிறார். பத்தினி கண்ணகிக்கு வீரக்கல் நாட்ட வேண்டினாள் மன்னன் மனைவி வேண்மாள். சரியென, தென்பொதிகையில் கல்லெடுத்துக் காவிரியில் நீராடி வர ஆணையிடுகிறான் மந்திரிகளுக்கு.

அவ்வமயம், வடநாட்டினின்று திரும்பிய தமிழ்நாட்டு வணிகன் ஒருவன் ஆரியன் அட்டூழியங்களை அரசன் முன் முறையிடுகிறான். கனக விஜயன் தன் புதல்வியின் சுயம்வர மண்டபத்தில் தமிழரையும், அவர் தம் அருந்தமிழ் மொழியையும், தமிழ் மன்னர்களையும் தாழ்வுறப் பேசியதையும் அவனது ஆணவத்தையும் எடுத்துரைக்கிறான். இதைக்கேட்ட மன்னனுக்குச் சினம் ஏற்படுகிறது.

உடனே,

"பொதிகையிலல்ல, இமயத்தில் கல்லெடுத்து வடவாரியர் முடித்தலைமேல் சுமக்கச்செய்து, கங்கையில் நீராட்டித் தமிழகம் கொணர்வேன், கற்புக்கனல் கண்ணகிக்கு வீரக்கல் நாட்டுவேன்"

என வஞ்சினங்கொண்டு சூளுரைக்கிறான். தன்னமைச்சர்களை நோக்கிப் போருக்கு ஆயத்தமாகுக என ஆணையிடுகிறான். போரில் தமிழர் வெற்றியடைகின்றனர். கனகவிஜயன் வீழ்கிறான். உலகம் வியப்புறப் பதினெட்டே நாழிகையில் தமிழக்கொடி உயர்த்துகிறான் சேரர் செம்மல். ஆணவம் பேசிய ஆர்யமன்னனின் தலை இமயக்கல்லைச் சுமந்து தமிழகம் வருகிறது.

இதனிடையில், கண்ணகியின் வீர சரிதத்தை சிலப்பதிகாரம் என்னும் பெயரால் காவிய உருவாக்கித்தருகிறார் இளங்கோவடிகள். பத்தினிக்கல் நாட்டுவிழா நடைபெறுகிறது. சிலம்புச் செல்வமும் அரங்கேற்றப்படுகிறது.

**நம் கருத்து.**

கதைப்பகுதி: சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்தில் காணப்படும் ஆதாரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டும், சரித்-திரங்களில் ஆரியர்களின் வரலாற்றைக் குறிக்கும் குறிப்புகளைக் கொண்டும் ஆசிரியர் இக்கதையை தீட்டியுள்ளார் எனத் தெரிகிறது. கதையில் காணப்படும் சம்பவங்கள்யாவும்மறுக்க முடியாத உண்மையென்பதில் சிறிதும் அய்யமில்லை.

ஆனால், இக்கதையில் பொற்றொடியைப் பற்றிய நிகழ்ச்சிகள் மட்டும் ஆசிரியரின் கற்பனை. கதை, வீரத்தை மட்டும் கொண்டிருப்பதால், நாடகத்திற்கு ஏற்ற முறையில், பல சுவைகளும் கலந்திருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், தமிழ்ப்பண்பினை விளக்கு முறையில், தமிழ் மக்கள் அந்நாளில் எத்தகைய மணவாழ்க்கை முறையை மேற்கொண்டு வந்தனர் என்பதை இன்றைய தமிழ் மக்களுணரும் தன்மையில் இக்கற்பனை சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டுமெனக் கருதுகின்றோம்.

மற்றும் கதையில் ஆரிய மன்னன், கனக விஜயன் தனது புதல்விக்கு திருமணம் நடத்தும் ஆரியமண முறையை விளக்கும் கட்டம் வருவதால், ஆசிரியர், தமிழ்மண முறையையும் விளக்க எண்ணி இப்பகுதியை சேர்த்திருப்பார் என்றே நாம் எண்ணுகின்றோம். அதனால், எந்நோக்கத்துக்காக இக்கதை எழுதப்பட்டுள்ளதோ அது ஒரு சிறிதும் பாதிக்கப்படவில்லை என்றே கருதுகின்றோம்.

ஆசிரியரால் கற்பனை செய்யப்பட்டுள்ள பொற்றொடி, காட்டில் வாழும் தமிழச்சி; வீரப்பெண்; மங்கைப்பருவத்தினள். இளங்கோவின் அழகைக்கண்டு அவன் மீது காதல் கொள்கிறாள். காதல் நோய் அவளை வாட்டுகிறது. அதனால் ஊண் உறக்கம் இல்லாமல் உடல் இளைத்துப் போகிறாள். இளங்கோவினிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். இளங்கோவடிகள் மறுக்கிறார். தன்னைக்காதலிப்பது உண்மையாயின் தான் காதலிக்கும் தமிழுக்குத் தொண்டு புரியுமாறு கூறுகிறார். அவளும் இசைகிறாள். ஆனால் இது அனுபவசாத்தியமானதா? தமிழ் மொழியின் மீது ஆர்வமோ ஆசையோ ஒருத்திக்கு இருந்ததாக

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

---

பொன்னுச்சாமி—சகுந்தலா திருமண அழைப்புத்தாளைப் பார்த்துக்கொண்டே!

"வாடாமலர் சகுந்தலா" என்றேன் அவளின் இடையில் கையைப் போட்டவாறு! "அண்ணா வருகிறார்" என்றாள். "வரட்டுமே" என்றது என் வாய். அதற்குள் முதல் முத்தம் முடிந்தது. பேசப்போன இடத்தில்...!

"மிஸ்டர் பொன்னுச்சாமி! சகுந்தலாவை அழைத்துக்கொண்டு வாருங்கள், பதிவுத்திருமண அலுவலகத்துக்கு" என்று கூறினார் · சகுந்தலாவின் அண்ணா! அவர் வார்த்தையை ஆமோதிப்பதாகச் சிரித்தாள் 'வாடாமலர்' சகுந்தலா.

# செய்தியும்—சிந்தனையும்.

★

● பம்பாய் சர்க்கார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், டிரேட்மார்க்குகள் சட்டம் 69 வது ஷரத்தைச் சுட்டிக் காட்டி, வர்த்தகக் குறிப்புகள், சின்னங்களுக்குத் தேசியக் கொடியை அனுமதியின்றி உபயோகிக்கக்கூடாது என்று தடை செய்திருக்கிறது.

—செய்தி.

இந்தத் தடை உத்திரவு தேசியக் கொடியுடைய கள்ள மார்க்கட் வியாபாரிகளான எம். எல். ஏக்களையும், மற்றையோரையும் எப்படிப் பாதித்து விடும் என்று கேட்கிறாராம் சென்னை மாகாணக் கள்ளமார்க்கட் வியாபாரி ஒருவர்.

0 0 0

● உலகின் இதர பகுதிகளிலிருந்து ஒதுங்கி இந்தியா தனித்து வாழ முடியாது. அதேபோல் இந்தியாவில் எந்த மாகாணமும் தனித்திருக்க முடியாது.

—மந்திரி முகர்ஜி.

தனித்து வாழ முடியாத இந்தியா வேறு எந்த அரசுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும்? உவமையிலேயே ஓட்டை விடுகிறீர்களே! இனி என்னிடமாவது உவமைகளும் குட்டிக் கதைகளும் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள் என்று, ஆச்சார்யார் "மந்திரிகளுக்கான ஒரு பயிற்சிப் பள்ளிக்கூடத்தைத் திறக்கப்போகிறார்" என்கிற வதந்திக்கு டெல்லியில் சிறிதும் ஆதாரமில்லையாம்.

0 0

● அமெரிக்காவில் இந்தியாவின் கௌரவம் மிக உன்னத ஸ்திதியில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது என்னுடைய கடமையாகும்.

—ஸ்தானிகர் சர். ராமராவ்.

உணவுக்கும் உடைக்கும் திண்டாடும் இந்தியாவில், இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொண்டு எப்படியோ இன்னும் சிலரையாவது நம்பவைத்து வருகிறோமே; அப்படியிருக்க உண்மை தெரியாத அமெரிக்காவில் அந்தக் கௌரவத்தைக் காப்பாற்றுவதுதானா கடினம் என்கிறாராம் நம்நாட்டு விளம்பர மந்திரி ஒருவர்.

0 0 0

● உங்கள் முன்னோர்கள் கடவுளுக்காக ஆலயங்கள் கட்டினர். நீங்கள் அறிவு நிவாரண ஆலயங்கள்—பள்ளிக் கூடங்கள்—ஆஸ்பத்திரிகள் கட்டுங்கள். உங்கள் முன்னோர் மாட்டு வண்டி, படகு, யுத்ததாதம் ஆகியவைகளைக் கட்டினர், நீங்கள் மோட்டார் கார், விமானம், கப்பல்களைக் கட்டுங்கள்.

—அனந்தப்பூரில் சென்னைப் பிரதமர்.

இதைக் கூறிய விடுதலைக்கு 2000-ம் கேட்ட சென்னைப் பிரதமர் தான் இவ்வாறு கூறினாரா? இது எந்தப் புத்தியைச் சேர்ந்தது? என்று நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?

0 0 0

● முஸ்லிம் லீக் அபேட்சகருக்கு "வோட்" அளிக்காவிடில் ஆண்டவன் தண்டிப்பார் என்று கூறி 46-ம் வருடத் தேர்தலில் வெற்றிபெற்ற அய்க்கிய மாகாண முஸ்லிம் லீக் மெம்பர் சட்டசபையிலிருந்து இறக்கப் பட்டார். மேலும் 1000 ரூ. செலவு தொகையும் கொடுக்கவேண்டுமென்று தேர்தல் கோர்ட் தீர்ப்பளித்தது.

—செய்தி.

மஞ்சளையும், தாலியையும் நினைப்பூட்டி பயத்தைமட்டுமல்ல, பாலாறு, தேனாறு ஓடும் எங்கள் ஆட்சியில் என்று ஏமாற்றுப் பேச்சுகளைப் பேசி ஏமாற்றவும் செய்த சென்னை மாகாண எம். எல். ஏக்கள் எப்பொழுது யாரால் இறக்கப்படுவார்கள்?

0 0 0

● திருவண்ணாமலை நகரசபை காமராஜ் நாடாருக்கு வரவேற்புக் கொடுத்தபோது தோழர் காமராஜர், சிறந்த தேசபக்தரான அண்ணாமலைப் பிள்ளைக்கு, அவர் திருவண்ணாமலைக்காரராயிருந்தும் அவரின் 60ம் ஆண்டு விழாவுக்கு ஏன் நகரசபை உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கவில்லை என்று கேட்டார்.

—செய்தி.

தெருவில் குடித்துவிட்டு புரளுகின்றவர்கள் எல்லாம், ஒருமுறை ஜெயிலுக்குப் போய்வந்தால் பெரிய தேசபக்தராகிவிடுகிற காலமாயிருப்பதால் "உள்ளூர் மாடு" எப்படி என்பது உள்ளூர்வாசிகளான எங்களுக்குத் தெரியாதா? என்று நகரசபை திருப்பிக் கேட்டிருக்க மாட்டாது என்று நம்பலாமா?

0 0 0

● சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்துள்ள தோழர் கே. பி. கேசவமேனனை, மாதவமேனனுக்குப் பதிலாக அ. இ. சபைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேரளக் காங்கரஸ் கமிட்டி செய்த தீர்மானத்தைமறுத்து, தான் அ. இ. சபைக்குச் செல்ல சம்மதிக்கவில்லை என்று தோழர் மேனன் கூறியிருக்கிறார்.

—செய்தி.

அரசியல் நிர்ணய சபையை ஒரு வடிகட்டிய ஏமாற்று நாடகசபையாகத் தோழர் மேனன் கருதியிருக்கின்றார் என்று இந்த மறுப்பிலிருந்து கூறலாமா?

## நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு.

தூத்துக்குடி 13—7—48. நெல்லை, அம்பிகாபுரத்தில் 11-7-48ல் பெரியார் அவர்கள் தலைமையில் கூடி தீர்மானித்ததின்படி 17-7-48க்குள் தொண்டர்களின் பெயரை என் முகவரிக்கு அனுப்பிவிட வேண்டுவதுடன், இத்தொண்டர்கள் லிஸ்டு கிடைத்ததற்கு மேல் நெல்லை மாவட்டத்திலுள்ள முக்கிய இடங்களுக்கு நான் நேரில் விஜயம் செய்வேன் அதன் தேதி பின், வணக்கம்.

கே. வி. கே. சாமி.
செயலாளர் நெ. மா. தி. கழகம்.

## மறைவு.

ஈரோடு 13—7—48.

குடி அரசின் நிர்வாகியும், ஈரோடு வாசி ஆசிரியருமான தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்களின் தங்கையான தோழியர் பி. பகீரதி அவர்கள், சில மாதங்கள் காயலாக இருந்து இன்று அதிகாலையில் இயற்கை அடைந்தார்கள். உறவினர்களும் இயக்கத் தோழர்களும் பெருவாரியாக வந்து, உருக்கத்தோடு, மாலையில் நடந்த அடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

மிக்க இளவயதில் அம்மையாருக்கு நேர்ந்த இந்த முடிவைக்கண்டு, வாட்டமுறும் தந்தையார் தோழர் பழனியப்பா அவர்களுக்கும், தமையனார் தோழர் பி. சண்முகவேலாயுதன் அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## பொது மக்கள் பள்ளிக்கூடம்

இராசிபுரம் 9-7-48.

பட்டணம் கிராமத்தில் பொதுமக்கள் பள்ளிக்கூடத்தை உயர்திரு இராமசாமிக் கவுண்டர் எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணாதுரையவர்கள் திறந்து வைத்தார்கள். பெரியார் ஈ. வெ. ரா. படத்தையும், பெரியார் காந்தியார் படத்தையும் ஊழியனார்-புலவர் குழந்தை அவர்கள் திறந்து வைத்தார்.

## உதயம்.

13—7—48 ந் தேதி ஈரோடு திராவிடகழக அமைப்பாளரும் (திராவிட மாகாண மருத்துவர் கழக) செயலாளருமாகிய ஈ. க. கருப்பையாவின் வாழ்க்கை துணைவியார் தோழியர் குப்பாய் அம்மையாருக்கு ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலம்.

குடி அரசு

17—7—48 சனிக்கிழமை.

# லாபப் பங்கு மசோதா.

★

சென்னை மாகாணக் காங்கரஸ் மந்திரிசபையினர் ஏன் இப்படிப் பொது மக்கள் கண்ணில் மண்ணைத் தூவுகின்றார்களோ? கண்ணில் மண்தூவும் கடைகெட்ட போக்கால், பொது மக்களை ஏமாற்றி விடலாம் என்று எண்ணுவார்களேயானால் அந்த எண்ணத்திலே நிச்சயம் மண்விழுவது உறுதி. அல்லது ஆட்சிக்குப் பாதுகாப்பு என்று கருதுவார்களேயானால் அந்தக் கருத்தினால் ஆபாயத்துக்குக் குழி பறிக்கின்றார்கள் என்பது உறுதி.

சென்னை சர்க்கார் ஜில்லா போர்டுகளை மாற்றி யமைப்பதற்காக ஒரு திருத்த மசோதா கொண்டுவரப் போவதாக இந்த மாதம் முதல் வாரத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கின்ற எந்தச் சுய சிந்தனையுள்ள எக்கட்சியிலிருக்கும் அரசியல் வாதியும் ஆச்சரியமும் திகைப்பும் அடையாமலிருக்க முடியாது.

1938—39 ம் வருஷம் நடந்த தேர்தலுக்குப் பிறகு ஜில்லாப் போர்டுகளுக்கு தேர்தலே நடக்கவில்லை. அதாவது சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு தேர்தல் நடந்தது. இடையே ஜில்லா போர்டுகள் கலைக்கப்பட்டு, அப்போதிருந்த அட்வைசரி சர்க்காரால் மெம்பர்களை நியமிக்கப்பட்டு வந்து, பிறகு சுமார் ஒன்றரை வருஷமாக அந்தந்த ஜில்லாக் கலெக்டர்களின் ஆதிக்கத்தில் நிர்வாகம் விடப்பட்டிருக்கிறது.

இப்படி அதிகாரிகளின் கையில் ஸ்தல சுயாட்சியை விட்டு வைக்கக் கூடாது என்கிற ஞானோதயமுண்டாகி விட்டது என்று சொல்லிக் கொண்டுதான், இப்போது இந்த மசோதாவைக் கொண்டுவரப் போகிறோம் என்கிறது இந்த மந்திரி சபை.

வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை என்கிற திட்டத்தின் மீது தேர்தல் நடத்தவேண்டியிருப்பதால் என்ற காரணத்தைச் சொல்லி, அதாவது "எதிர் காலத்தில் உங்களுக்கு முழு உரிமை வரப்போகிறது" என்கிற ஆசை வார்த்தையைச் சொல்லித் தன்னுடைய கையாட்களை நியமனஞ் செய்ய வழி வகுப்பதாகும் இந்த மசோதா என்பது வெளிப்படை.

எங்கெந்த ஜில்லாவிலிருந்து சட்டசபைக்கு மெம்பர்கள் வந்தார்களோ, அப்படி வந்த மெம்பர்களில் வெளிப்படையாக மாதம் 1000, 2000, 3000 என்று யார் யார் சம்பளத்தின் பேராலும், வேறு பேராலும் எடுத்துக் கொள்ளமுடியாமல் "புத்தியும் தந்திரமும் இருந்தால் கொள்ளையடிக்கலாம், இல்லாவிட்டால் 150 ரூபாய்தான் மாதவருமானம்" என்கிற நிலையில் இருக்கும் எம். எல். ஏக்கள் எல்லாம், அந்தந்த ஜில்லா போர்டுக்கு மெம்பர்களாம். மேலும் ஜெயிலுக்குப் போனதகுதியிருந்தும், சட்டசபை மெம்பராவதற்கு என்னென்ன யோக்கியதை வேண்டும் என்று காங்கரஸ் எண்ணியதோ அந்த யோக்கியதைகள் எல்லாம் இருந்தும், எப்படி எப்படியோ சட்டசபைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருந்த கங்காணிகள் எல்லாம், இந்த ஜில்லா போர்டுக்கு நியமனம் செய்யப்படுவார்களாம். அவ்வளவு பேரும் காங்கரசின் கைப்பொம்மைகளாயிருந்தாலும், அந்த பொம்மைகளுக்குள் "காமராஜ் கட்சி" "ராஜாஜி கட்சி" என்கிற தகராறு எங்கு வந்து விடுமோ, அதனால் தன் பாதுகாப்பு எங்கு குறைந்து விடுமோ என்கிற பயத்தால், [பிரத்தியேகமான சந்தர்ப்பங்களில்] தலைவரை நியமிக்கும் பொறுப்பையும் மந்திரிசபை பெற்றிருக்குமாம். இதுதான் இந்த மசோதாவின் சாராம்சம்.

இப்போதிருக்கிற 270 சட்டசபை மெம்பாகளில் 201 மெம்பர்கள், மொத்தத்தில் சுயசிந்தனையை அடகுவைத்திருக்கும் காங்கரஸ் மெம்பர்கள், மந்திரிகளாகவும், சட்டசபைத் தலைவராகவும், துணைத்தலைவராகவும், கவுன்சில் தலைவராகவும் துணைத்தலைவராகவுமிருந்து மாதம் 1500க்குக் குறையாமல் 3500 வரை தின்று கொண்டிருக்கும் பேர் வழிகள் சுமார் 15 பேர் போகப்பாக்கி 186 பேர்வழிகளுக்கு என்ன யோக்கியதையும் தகுதியும் உண்டோ, அதற்கு எந்த விதத்திலும் மேலானயோக்கியதையோ உயர்ந்த தகுதியோ பதவிகளிலிருக்கும் மற்றவர்களுக்கு இல்லவே. இல்லை. இதை நாம் கூறவில்லை. அந்த 186 பேர் வழிகளே கூறாமல் கூறி மனம் புழுங்கி வந்திருக்கின்றார்கள். இந்த நிலைமையில், இந்த மசோதா மந்திரிசபையால் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றால் அதற்கு உண்மையான கருத்தென்ன?

பல பேர் சேர்ந்து அடித்த கொள்ளையில், அந்தக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் சரி பங்கு கிடைக்க வேண்டும் என்கிற நியாயத்தைத் தவிர, வேறு எந்த நியாயத்தின் மீது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றதென்று சொல்ல முடியும்? அதாவது எல்லோரும் ஒரே தகுதியுடையவர்களாயிருந்தும் அவர்களில் சிலர் மட்டும் ஆயிரக்கணக்கில் சம்பளமும், அடைவோம் என்று எண்ணியிராத உயர்பதவிகளும் பெற்றிருக்க, மற்றவர்கள் அந்த இரண்டு நிலையில் ஒன்றைக்கூட அடைய முடியாத நிலைமை நீடிக்குமானால், தங்களுக்குள் பெரிய போட்டிகளும் பொறாமையும் வளர்ந்தோங்கி, எதிர்காலம் மிகவும் இருள் சூழ்ந்ததாகிவிடும் என்று மந்திரி சபையின் மனதில் பட்டதால் அல்லவா இந்த மசோதா வெளிவந்திருக்க வேண்டும்?

எல்லோருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் மற்ற சில மாகாணங்களில் (காங்கரஸ்காரர்கள் ஆட்சியிலேயே) ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தல் நடந்திருக்கிறது என்கிற செய்தியோடு, இங்கு அதற்கு எல்லை குறிப்பிடப்படாமல் நியமன மெம்பர்களும், நியமனத் தலைவர்களும் உண்டாக்கப் படுவார்கள் என்கிற செய்தியைப் பொதுமக்கள் சேர்த்துப் பார்க்க மாட்டார்கள் என்று மந்திரிசபை நம்புகிறதா? எல்லோருக்கும் வாக்குரிமை என்கிற திட்டத்தின் மீது தேர்தல் நடத்தப்பட வேண்டியிருப்பதால் என்று கூறுகிறதே

தவிர, அந்தத் திட்டம் அமுலுக்கு வரும் காலத்தை உத்தேசமாகக் கூட வெளியிடவில்லை; சட்டசபையில் அதைப் பற்றிக் கேள்வி கேட்டபொழுதும், எப்பொழுது அந்த மாதிரித் தேர்தல் நடத்த முடியும் என்று காலத்தைக் குறிப்பிட முடியாது என்று மந்திரி சபையால் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைப் பார்த்த பிறகும், தங்களை மந்திரிசபை நம்பவில்லை என்பதைத்தானே இந்த நடவடிக்கைகள் காட்டுகின்றன என்று பொதுமக்கள் எண்ணமாட்டார்கள் என இந்த மந்திரி சபை நம்புகிறதா?

சென்ற முனிசிபல் தேர்தலில், பொதுமக்கள் கற்றுக் கொடுத்த பாடமல்லவா, பொது மக்கள் முகத்தில் விழிப்பதற்கே மந்திரி சபை மருண்டு இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு மற்றொரு காரணமாகும்? சட்டசபைக்கு நடக்கும் உபதேர்தல்களும், காங்கரசுக்கு தோல்விமேல் தோல்வியாக இருக்கும்பொழுது, பொதுமக்களை இந்த மந்திரி சபை எப்படி நம்பமுடியும்? அடைகிற தோல்வியை யெல்லாம், அமோக வெற்றி என்று புளுகித் தள்ள பத்திரிகைப் பிரச்சாரமும், மற்றப் பிரசாரமும் இருந்தாலும் அவைகளை எவ்வளவு நாளைக்கு நம்பமுடியும்? ஏற்படுகிற தோல்விகளோ அடிவயிற்றைக் கலக்கிக் குழப்பி விடுகின்றனவே. சென்னை சட்டசபைக்கு நடந்த உபதேர்தல் முடிவு இந்த மாதம் 12-தேதி வெளி வந்திருக்கிறது. அதைத் தினமணி எப்படிப் புளுகித் தள்ளியிருக்கிறது என்பதற்காக அப்படியே இங்கு தருகிறோம், 13—7—48-ம் நாள் (வெளியூர் 14—7—48-ம் நாள்) தினமணி 5-ம் பக்கம் முதல் பத்தியில் இச் செய்தி வெளிவந்திருக்கிறது.

“சென்னை அசெம்பிளி உபதேர்தல்.

காங்கரஸ் அபேட்சகர்களுக்கு அமோக வெற்றி

விஜயவாடா, ஜூலை 12.

விசாகை கி. கோதாவரி துறைமுகத் தொழிற்சாலை தொழிலாளர் தொகுதியிலிருந்து சர்தார் ஸ்ரீ லட்சன்னா (காங்கரஸ்) சென்னை அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சோஷலிஸ்ட் முடிவு காரணமாக டாக்டர் மல்லிகார்ஜுனராவ் ராஜினாமா செய்ததால் தான் இக்காலி ஸ்தானத்திற்கு உபதேர்தல் நடைபெற்றது. ஸ்ரீ லட்சன்னாவுக்கு 4213-வோட்டுகளும் சாம்பமூர்த்திக்கு (கம்யூனிஸ்ட்) 3466-வோட்டுகளும் சோஷலிஸ்ட் டிக்கெட்டில் மீண்டும் தேர்தலில் நின்ற டாக்டர் மல்லிகார்ஜுனாவுக்கு 1119-வோட்டுகளும் கிடைத்தன. 34-வோட்டுகள் செல்லுபடியாகவில்லை.

லீகருக்கு வெற்றி.

திருநெல்வேலி, ஜூலை 12.

சென்னை அசெம்பிளிக்கு திருநெல்வேலி முஸ்லிம் ஸ்தானத்திற்காக நடைபெற்ற உபதேர்தலில் லீக் அபேட்சகர் ஸ்ரீ, எம். என். அப்துல் ரஹிமான் 1622-வோட்டுகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்த்து நின்ற முகமது இப்ராஹிம் 706-ம் சிட்டாபாய் 201 பெற்று ஜாமீன் இழந்தனர்.’’

செய்தியையும், தலைப்பையும், அவற்றிலுள்ள பித்தலாட்டப் புளுகின் தனிச்சிறப்பையும் மற்றொரு முறை சேர்த்துப் பாருங்கள். ஒரு இடத்தில் காங்கரசும், மற்றோரிடத்தில் முஸ்லிம் லீக்கும் வெற்றி பெற்றிருக்க, அதற்குக் கொடுத்திருக்கும் தலைப்பு காங்கரஸ் அபேட்சகர்களுக்கு அமோக வெற்றி. மேலும், ஒரு இடத்தில் காங்கரஸ் வெற்றி பெற்றிருக்கின்றதென்பதும், இப்போதிருக்கிற தேர்தல் சட்டப்படியே தவிர உண்மையில் வெற்றியல்ல, பெருந்தோல்வியே. எப்படி? காங்கரசுக்கு 4213. காங்கரசை எதிர்த்து நின்றவர்களுக்கு $(3466 \times 1119)$ 4586. காங்கரசுக்குக் கிடைத்த 4213-ம் கம்யூனிஸ்ட் தலைவர்களைச் சிறைக்குள் தள்ளி, தொண்டர்களை வாட்டி வதைத்து, பேச்சுரிமை எழுத்துரிமை ஆகிய எல்லா உரிமைகளையும் பறித்து, அட்டகாசம் பண்ணிய அக்கிரம வழியால் கிடைத்தவை என்பதையும் எண்ணிக் கொண்டால், இது அமோகமான தோல்வியா? அமோகமான வெற்றியா?

இதே நேரத்தில் திருநெல்வேலி தேர்தலையும் கணக்கிட்டுப் பாருங்கள். முஸ்லிம் லீக்குக்கு 1622. முஸ்லிம் லீக்குக்கு எதிராக காங்கரஸ் பலத்தைக் கொண்டு நின்ற எதிரிகள் பெற்றது $(706 + 201)$ 907. இங்கோ படுபாதாளமான தோல்வி. இதைத்தான் தேசீயத் தாள்கள் அமோக வெற்றி என்று வருணிக்கின்றன.

இந்த வருணனை, பொதுமக்கள் கண்ணில் மண்ணைப் போட்டுவிடும் என்று தேசீயத் தாள்கள் எதிர்பார்க்கின்றன என்றாலும், மந்திரிசபை, தனக்கு மக்களிடம் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது? என்பதை அறிந்து கொண்டிருக்கும் அச்சமே இந்த மசோதாவிற்கு மற்றொரு காரணம் என்று நாம் குறிப்பிடுவதை எப்படி தவறென்று சொல்லிவிட முடியும்?

பிரதம மந்திரியின் ஜில்லாவிலுள்ள கடலூரில், நேற்று நடந்த முனிசிபல் தேர்தலின் முடிவையும், காங்கரசின்பெயர் சொல்வதற்கேஆள் அகப்படாமல் போய்விட்ட பரிதாபக் காட்சியையும் பார்த்து மந்திரிகளின் மனம் எப்படிப் பதறாமலிருக்கும்?

ஆனால், இதற்காக, இந்தக் காட்டுமிராண்டித்தனமான சர்வாதிகார ஆட்சி முறையை “ஜனநாயகம்” “ஜனநாயகம்” என்று கூச்சல் போட்ட காங்கரஸ் மேதாவிகள் செய்யலாமா? அட்வைசர் ஆட்சியில் உலகப் போரைக் காரணமாகச் சொல்லி, 42—45ம் வருஷங்களில் அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நியமன முறையைக் கையாண்டபோது, அதுவும் காங்கரஸ்காரர்களைப் பெரும்பாலோராக நியமித்தபோது, அந்த நியமனங்களைக் கண்டித்தவர்கள் இந்த பிரகஸ்பதிகள்தானே? ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில் தேர்தல் முறையோடு நியமன முறையும் கலந்திருக்க, அதைக் கண்டித்துப் பேசிய வாய்களில் எல்லாம் இப்போது எதை வைத்து அடைக்கப்பட்டிருக்கிறது? கண்டித்தெழுதிய கைகளை யெல்லாம் இப்போது கட்டிப் பிடித்து வைத்திருப்பவை எவை? அறிவும் மானமுமுள்ள எவரும் பொதுமக்களின் இக்கேள்விக்குப் பதில் கூறவேண்டாமா?

மெம்பர்களை நியமிப்பதே அக்கிரமம் என்று பேசிய இந்த மந்திரிகள் தான், இன்று மெம்பரை மட்டுமல்ல, தலைவரையும் நியமனம் செய்யப் போகிறோம் என்று வெட்கத்தை விட்டுச் சொல்லும்படியான நிலைமைக்கு வந்திருக்கின்றார்கள். இதனால் ஏற்படப்போவது என்ன?

ஒரு கட்சி சர்க்காரில், அக்கட்சியைச் சேர்ந்தவர்களே ஸ்தலஸ்தாபனங்களில் ஆதிக்கம் செலுத்து

வார்கள். அதுவும், மந்திரிசபைக்குப் பக்கபலமாய் இருக்கும் என்று நம்பப்படுகிற ஆசாமிகளின் கையில்தான் ஸ்தாபனங்களின் நிர்வாகம் (தலைமை) கொடுக்கப்படும். அந்த நிர்வாகத்தைமாற்ற, அந்த நியமனத்தைக் கண்டிக்க, தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர அந்த மெம்பர்களுக்கே உரிமையில்லாது போகும். சட்டசபை என்றைக்கும் தங்கள் கையைவிட்டுப் போகக்கூடாது என்கிற திட்டத்திலேயே, எந்தக்காரியத்தையும் செய்பவராயிருப்பார் அந்தத் தலைவர். சுருக்கமாகச் சொன்னால், சட்டசபை எலக்‌ஷனுக்குப் பேரம் பேசியே ஒவ்வொரு காரியத்தையும் ஜில்லா போர்டுகள் செய்யும். நியமனம் செய்யப்பட்ட மெம்பர்கள், மந்திரிகள் வேலையில் இப்போது தலையிட்டுக் கொண்டு, "அவர் தேசீயவாதி" "இவர் நமக்கு மிகவும் பலமாயிருந்தவர்" "இந்த ஆசாமியால்தான் நம்மவர்கள் வெற்றிபெற முடிந்தது" என்றெல்லாம் கூறி "இதை இப்படிச் செய்யவேண்டும், அதை அப்படிச் செய்து விடுங்கள்" என்று கூறுகிற தொல்லைகள் எல்லாம் ஓரளவு குறையலாம். அவர்களும் அங்கங்கே, அந்தந்த ஜில்லாவிலே, நாதியற்ற சொத்துக்கு (ஜில்லா போர்டுக்கு) தர்மகர்த்தாக்களாக இருந்து, 46-ம் வருஷ மாடல் நவீன ஜமீன்தாரர்களாக விளங்கி, தொண்டை முட்டுமட்டும் முடிந்தால் சாப்பிட்டுப் பார்க்கலாம். இந்த ஊழல்கள் வெளியாகி அவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வந்தாலும், அதில் நியாயம் சொல்ல எந்தக்கோர்ட்டுக்கும் உரிமையே யில்லாது போகலாம் என்று பொது மக்கள் எதிர்பார்க்கின்ற பயன்களைத் தானே, இந்தப் பார்ப்பனீய அடிமை மந்திரிசபையும் எதிர்பார்க்கின்றது?

ஸ்தல சுயாட்சியின் அடிப்படைத் தத்துவமே, அந்த ஸ்தலத்தில் உள்ளவர்களைத் தவிர வெளியார் எவருமே அதன் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது; ஸ்தலத்திலுள்ளவர்களுக்கே முழு உரிமையும் இருத்தல் வேண்டும் என்பதாகும். இதை நாம் கூறினால் இந்தப் பாசிஸ வெறியர்களுக்கு ஏறுமா? இந்த மசோதா அமுலுக்கு வரட்டும்! காங்கரஸ் முத்திரையோடு பகற்கொள்ளை பகிரங்கமாகவே நடக்கட்டும்! அப்பொழுது எச்சில் எலைக்கு போட்டி போடுவது போல், அவர்களுக்குள்ளேயே ஒருவரையொருவர் கடித்து (கண்டித்து) ரத்தப் பலியைக் கண்டு கொள்ளட்டும்! ஆனால்,

இந்தக் கூத்து எத்தனை நாளைக்கு? இந்தப் பகற் கொள்ளை எவ்வளவு காலத்திற்கு? எங்களையென்ன விலங்குகள் என்றா எண்ணுகிறாய்? இறங்கு இடத்தை விட்டு! பொது மக்களின் இந்த எழுச்சிக் குரலை—உள்ளத் துடிப்பை—உரிமை வேட்கையைத் தூண்டி எழுப்புவது தான் இந்த லாபப் பங்கு மசோதா. ஆகவே லாபப்பங்கு மசோதாவே வா! வா! சீக்கிரம் வா! என்று நாம் வரவேற்புக் கூறுகிறோம்,

# ★ பெரிய மயக்கம். ★

[எம். என். ராய்]

★

[தோழர் எம். என். ராய் அவர்கள் இப்போதைய ஆட்சியின் சுயரூபத்தைக் குறித்து அண்மையில் எழுதிய ஒரு கட்டுரையின் சாராம்சம் இது. ஆ-ர்]

தேசிய சுதந்தரத்தை நாம் அடைந்துவிட்டோம். கிராமவெட்டியான் முதல் கவர்னர் ஜெனரல் ஈறாக உள்ள எல்லா சர்க்கார் பதவிகளும் இந்தியர் மயமாக மாறிவிட்டது. ஏதோ ஒரு சில வெள்ளைக்காரர்கள்தான் அங்கு மிங்குமாக இருக்கலாம். லார்டு மவுண்ட்பேட்டனுடன் அனேகமாக எல்லா வெள்ளையரும் கப்பலேறிவிட்டார்கள் என்றே சொல்லலாம்.

பெயரளவுக்கு இந்தியா டொமினியனாகஇருந்து வருகிறது. புதிய அரசியல் பிரகடனஞ்செய்யப்பட்டதும் இந்த டொமினியன் அந்தஸ்தும் மறைந்துவிடும். ஆனால், ஆரம்பத்தில் தலைவர்கள் எனப்படுபவர்களில் சிலர், பிரிட்டனுடன் அரசியல் சம்பந்தம் வைத்திருக்கவேண்டும்; முற்றிலும் தொடர்பை அறுத்துக் கொள்ளக் கூடாது என்கிற எண்ணத்தின் மீது அதற்கான தகுந்த காரணங்களைத் தேடி வந்தார்கள். என்றாலும், புதிய அரசியலில் இத்தகைய தொடர்பு இருப்பதற்கான இடம் அளிக்கப்படும் என்று நான் நம்பவில்லை.

சுதந்தர குடிஅரசுத் தன்மை பெற்ற ஒரு நாடு, பிரிட்டிஷ் சர்க்காரின் கீழ் சுயவாட்சி பெற்ற அரசாக-டொமினியனாக இருக்கமுடியாது. அதிலும் நாட்டை ஆளவந்திருப்போர்கள் பூரண சுதந்தரந் தான், தனிக்கவுரவமும் பெருமையுமளிக்கக் கூடியதெனக் கருதி வருபவர்கள். எனவே, இன்று கவர்னர் ஜெனரலாக இருந்து வரும் முதல் இந்தியர்தான் முதல் இந்திய கவர்னர் ஜெனரலும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரலுமாவார் என்பது முடிந்த முடிவுதான். அனேகமாக இவ்வருடக் கடைசிக்குள் இந்தியா 'குடிஅரசு' எனப் பிரகடனம் செய்யப்பட்டுவிடும். புதிய அரசாங்கத்துக்கு ஒரு தலைவர் தெரிந்தெடுக்கப்படுவார்.

எனவே, நடைமுறைப்படி--சம்பிரதாயப்படி பூரண சுதந்தரத்தின் இலட்சியம் நிறைவேறி விட்டது. இது பெரிய புகழுக்குரிய—செயற்கரிய காரியமாகும். ஒவ்வொரு இந்தியனும்பூரிப்படையவேண்டும். ஆனால் அதே சமயத்தில், இன்றைய நிலைமையைச் சிந்தித்துப் பார்க்கும்—உண்மையைஆராய்ந்து பார்க்கும் உரிமையையும் அவன் பெற்றிருக்கிறான். அந்தப்படி எத்தனை பேர்கள் சிந்தித்துப் பார்க்கிறார்கள்? என்ன நடந்தது? எப்படி இவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டது? என்ன பிரமாதமான காரியம் ஏற்பட்டு விட்டது நாம் பெருமை கொள்ள—பூரிப்படைய என்று எவர் எண்ணிப் பார்க்கிறார்கள்?

அவ்வாறு எண்ணிப்பார்த்தால் உண்மை நிலை தானாகவே விளங்கும். ஒரு இந்தியர் கவர்னர் ஜெனரலாக வந்து விடுவது ஒன்றும் பெரிய காரியமில்லை. படிப்படியாக மாறுதலடைந்து வந்த மாற்றங்களின் உச்ச நிலை இது. ஒரு மாகாணத்தைத் தவிர எல்லா மாகாண கவர்னர்களும் இந்தியர்களே. அந்த ஒருவரும் கப்பலேறுவதற்கு நாள் பார்த்துக்கொண்டிருக்கிறார். எனவே, மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் இந்நாட்டு மக்களால்—மன்னர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எல்லாப் பொதுஜன ஊழியர்களும்

இந்தியர்களாகவே இருந்து வருகின்றனர். அதுபோலவே இராணுவமும்.

இவ்வளவு மாறுதல்களும் எவ்வளவு காலத்திற்குள்? எல்லாம் ஒரு வருடத்திற்குள். இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இவ்வளவு பெரிய மாறுதல் நடைபெற்றிருப்பதாக எந்த நாட்டுச்சரித்திரத்திலேயும் காணமுடியாது, அதுவும் எத்தகைய புரட்சியுமில்லாமல்.

ஆனால், உண்மையாகவே சர்க்காரில் ஏதாவது மாறுதல் உண்டா? பிரிட்டிஷார் எத்தகைய நிர்வாக இயந்திரத்தை வைத்திருந்தார்களோ அதுதானே இன்னும் இருந்து வருகிறது? அது ஒரு சிறிதாவது அசைக்கப்பட்டிருக்கிறதா? ஆள்கள் தானே மாற்றப்பட்டிருக்கின்றனர். வெள்ளையன் இருந்த இடத்தைக் கருப்பர்கள் நிரப்பியிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்னமாறுதல்? அதே சட்டங்கள்—வெள்ளையர் இயற்றிய சட்டங்கள்தான் அமுலிலிருந்து வருகின்றன. பழைய ஆட்சி எப்படி நடந்துவந்ததோ அதே தன்மையில்தான் இன்றும் ஆட்சி நடத்தப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் வைஸ்ராயின் நிர்வாகக் கவுன்சிலுக்குப் பதிலாக—அதிக அதிகாரத்தையுடைய மந்திரிசபையிருந்து வருகிறது. இதுபோன்ற மாறுதல்தான் மாகாண சர்க்காரிலும். ஆனால் நிர்வாக இயந்திரம் அப்படியேதான் இருந்து வருகிறது.

அந்த உளுத்துப்போன செல்லரித்த சட்டங்களைக்கொண்டே இன்றும் நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களைப் பொருத்தமட்டில் சர்க்காரில் எத்தகைய மாறுதலும் ஏற்பட்டிருப்பதாகக் கண்டுகொள்ள முடியாத நிலையிலிருந்து வருகிறது.

யூனியன் ஜாக் கொடிக்குப் பதில் மூவர்ணக்கொடி ஒய்யாரமாகப் பறக்கிறது. இந்தியாவுக்கு தேசிய கீதம் இருக்கிறது. வெளிநாடுகளுக்குத் தூதுவர்களை இந்தியா அனுப்பி வைத்திருக்கிறது. இந்தியாவின் தேசியக் கொடி—அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்ட கொடி வெளிநாடுகளில் பறப்பதைக் கண்டு பெருமை கொள்ளலாம். நமது கொடி மதிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு மரியாதை செலுத்தப்படுகிறது என்று பூரிக்கலாம். எழுகடலிலும் மூவர்ணக்கொடி படப்படவென்று பறக்கும் காட்சியைக் காணலாம். படை பலமில்லாது இழிவுபடுத்தப்பட்டு வந்த இந்தியா இனி உலக வல்லரசுகளில் ஒன்றெனத் திகழப்போகிறது. இதைத் தவிர வேறு, எதைக் காண்கிறோம்?

சுதந்தர இந்தியாவுக்கு எல்லாப் பெருமைகளும் பெருகட்டும்! சூரியனைப்போல் அதன் புகழ் பிரகாசிக்கட்டும்! ஆனால் அதே சமயத்தில் இந்நாட்டில் வாழும் இலட்சோப லட்ச மக்களின் வாழ்வு வளமாக வேண்டாமா? அது ஒளிபெறவேண்டாமா? இந்தியா ஏழு இலட்ச கிராமங்களின் அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்று ஆதாரபூர்வமாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கிராமங்களின் நிலை எந்த அளவுக்குப் பிரகாசிக்கிறது? மூவர்ணக் கொடியின் பொலிவைக் கண்டு பூரித்தால் போதுமா? இதன் கௌரவம் காப்பாற்றப்பட்டால் போதுமா? இந்த இலட்சக் கணக்கான கிராமங்களின் மானம் பறிபோகிறதே! அவைகளைக்குறித்து என்ன செய்யப்படுகிறது? வெறும் மயக்கத்திலிருந்து வந்தால் போதுமா? அஸ்திவாரம் ஆட்டங்கொடுத்தால் கட்டடம் நிலைக்குமா? அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவேண்டாமா?

இன்றைய சுதந்தரத்தை எவ்வளவு பேர்கள் அனுபவிக்கிறார்கள்? ஆளுபவர்களின் குடும்பமும் அவர்களது எடுபிடி ஆள்களும் தானே அனுபவிக்கிறார்கள்? அவர்களுக்குத்தானே எல்லாச் சலுகைகளும்—ஆதரவுகளும் அளிக்கப்பட்டிருக்கிறது? மற்றவர்களால் வெள்ளையன் ஆட்சிக்கும், இன்றைய ஆட்சிக்கும் எத்தகைய வித்தியாசத்தையும் தெரிந்துகொள்ள முடியவில்லையே? எங்குபார்த்தாலும் ஊழல். தனிச்சலுகைகள்.

மக்களுக்குத் தேவையான உணவு—உடை முதலியவைகள் யுத்த காலத்தைவிட மோசமான கட்டத்தை யடைந்துவிட்டதே. எவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது? கண்ட்ரோல்-கட்டுப்பாடு எடுக்கப்பட்டதினால் யாருக்குலாபம்? கொள்ளை லாபக்காரர்களுக்கு வழிதிறந்து விடப்பட்டது. ரேஷன் ஒழிக்கப்பட்டதினால் யாருக்கு லாபம்? ஏழைகள் வாயில் மண். ஒன்றுக்கு மூன்றாக விலைகொடுத்தாக வேண்டியிருக்கிறது. பலரால் இவ்வளவு விலை கொடுத்து வாங்கமுடியாததால் அவசியமானவற்றை வாங்காமலேயிருந்து விடுகிறார்கள். இப்படியாக, தேசிய சுதந்தரம், பாமரமக்களின் நித்திய வாழ்க்கையைப் பாழ்படுத்திவருகிறது. ஆனால் இதற்கான காரணம் என்ன என்பதை பாமரர்கள் உணரமுடியாது செய்யப்பட்டுவருகிறார்கள்.

இதுதானா சுதந்தரம்? இதற்குத்தானா இவ்வளவுபாடு என்று கேட்டால், அதற்குள் சர்க்காரைக் கண்டிக்கலாமா சிறிது ஓய்வு கொடுக்க வேண்டாமா என்று வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்கள். உண்மை. உடனே மாறுதல்களைக் காண முடியாதுதான். ஆனால், இன்னும் சுதந்தரத்தைக் குறித்து ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்? ஏன் மக்களை மயக்கவேண்டும்? நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை நாளுக்குநாள் மோசமடைந்து கொண்டு போகிறது. இதைத் திருத்தவேண்டாமா? திருத்தும் மனமாவது வேண்டாமா? சர்க்கார் நினைத்தால் முடியாதா? அதைக்குறித்து நினைத்துப் பார்ப்பதில்லை. நினைக்க நேரமேது? ஆள்பவர்களின் சொந்த நலன்களைப்பார்க்கவும் தங்களின் சுய புராணத்தைப் பற்றிப் பேசவும் நேரம் சரியாய் விடுகிறது. பொதுமக்கள் நலனைக் கவனிக்கநேரமேது? அவர்களின் உடையைப் பற்றியோ உணவைப்பற்றியோ கவலைஏது? நிர்வாகத் திறமையற்றவர்கள் என்பதை அவர்கள் செயல்களே மெய்ப்பிக்கின்றன. சுதந்தரத்தின் பொருள் தெரியாமல் மக்கள் ஆதரித்ததின் பயனை இன்று அவர்கள் அனுபவிக்கநேரிட்டது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

---

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தெரிந்து கொள்ளாத நிலையில், தன்மனத்தில் இடைவிடாமல், ஒரு ஆண் அழகனைக் கூடிவாழவேண்டுமென்ற ஆசையிலிருக்கும் ஒருத்தியின் மனத்தில், எவ்வாறு திடீரென்று அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு தமிழுக்குத் தொண்டு புரிய முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. பொதுவாக ஒருவனுக்கோ ஒருத்திக்கோ எப்பொருளின் மீதும் எவர் மீதும் விருப்பு ஏற்பட்டால், அவ்விருப்பு மாற வேண்டுமானால் வெறுப்பதற்கான காரணங்கள் ஏதாவது நிகழவேண்டும். அவ்வாறு பார்த்தால் பொற்றொடி.

ரோஜா முத்தையா

இளங்கோவை வெறுப்பதற்கான காரணங்கள் ஒன்றுமில்லை. எனவே, தீராக்காதல் கொண்டிருப்பவளாக பொற்றொடியைக் காட்டிவிட்டு திடீரென மனமாற்றமடைந்து விட்டாள் என்பது அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

இரண்டாவது, வேடுவத் தலைவனுக்கு இல்லறத்தின் மேன்மையைக் குறித்து உயர்த்திப் பேசிவிட்டு, அடுத்தாற்போல், இல்லறத்தில் வாழவிழையும் ஒருத்தியைத் துறவுகோலம் பூணுமாறு செய்திருப்பதும், முதலில் இல்லறத்தின் உயர்வைக் குறித்து மக்கள் மனத்தில் பதிந்துள்ள எண்ணம் உறுதிபெற முடியுமா என்பதும் சிந்திக்க வேண்டியதாகும்.

அடுத்தபடியாக, ஆரிய மன்னன் கனக விஜயன் கோழையாகவே கதையின் இறுதிவரையில் காட்டப்படுகிறான். வீரமற்றகோழையைப் போரில் முறியடித்து தமிழ் மன்னன் வெற்றிமாலை சூடினான் என்பதை விட தன்னைப் போன்ற வீரனுடன் போர்புரிந்தே வெற்றிபெற்றான் என்று எழுதப்பட்டிருந்தால், தமிழ் மன்னனின் பெருமை இன்னும் அதிகமாக ஒளிபெறும்.

மற்றபடி, கதையின் கண் காணப்படும் வசனங்களை—கருத்துக்களை எள்ளளவும் குறைத்துக் கூறுவதற்கில்லை. அழகான ஆழமான கருத்துக்கள்.

ஆரம்ப முதல் இறுதி வரை, வசனங்களும் பாட்டுக்களும் பார்ப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையில் அமைந்திருக்கிறது.

தமிழ் மக்கள், சோதிடம் பார்த்தல், குறிபார்த்தல் போன்ற மூடப் பழக்க வழக்கத்திலாழ்ந்திருப்பதையும் இந்நம்பிக்கை யாரால் புகுத்தப்பட்டது என்பதையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இத்தகைய நம்பிக்கையை விட்டொழிக்க வேண்டியதின் அவசியத்தையும் பல பாத்திரங்களின் வாயிலாக வற்புறுத்தியுள்ளார். 'இத்தகைய மாயக்காரர்களின் சந்ததி மாண்டு மடியவேண்டும்' என்று உறுதியிட்டுக் கூறியிருப்பது மிக மிகப் பாராட்டக் கூடியதாகும். மேலும், "இத்தகைய காரியங்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுபவர்களை—அய்ந்தாம் படையினரை முதலில் ஒழித்துக்கட்டவேண்டும்" என்றுகூறியிருப்பது உண்மையிலே மக்கள் சிந்தனையைக் கிளறும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய தமிழ் நாட்டில், மொழியைக் காக்க வேண்டிய பொறுப்பிலிருந்து வரும் தமிழ் மக்களுக்கு இந்த வேளையில், இது போன்ற தமிழ் மொழிப் பற்றினை விளக்கும் கதைகள் பல தோன்ற வேண்டும். இத்துறையில் கட்சிப்பற்றில்லாத தோழர் வெங்கிடாசலம் அவர்கள் முன்வந்து தைரியமாக உண்மையான வரலாற்றினை உணர்ச்சிமிக்க நடையில் எழுதியிருப்பதை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். மேலும் மேலும் இத்தகைய வரலாறுகளை நாடகவாயிலாக விளக்கி, தமிழ் மக்களைத் தட்டியெழுப்புவராக எனக்கூறி அவரை வாழ்த்துகிறோம்.

நாடகப்பகுதி :— கதைகளை யார் எவ்வளவு விறுவிறுப்பாகவும் வேகமாகவும் எழுதியிருந்தாலும், அதனை நடித்துக் காட்டுபவர்கள் திறமையற்றவர்களாயிருந்தால் — ஆர்வமற்றவர்களாக இருந்தால்—மரக் கட்டைகளாயிருந்தால் அது உணர்ச்சியற்ற பொம்மலாட்டக் கூத்தாகவே தோன்றும். கதையில் உயிர் இருக்காது. மக்களின் மனத்திலும் எத்தகைய பயனையும் விளைவிக்காது. ஆனால், இங்கு இக்கதையை நடிக்கும் டி. கே, சகோதரர்களைப்பற்றியும் அவர்களின் நடிப்பின் ஆற்றலையும், அவர்களுக்கு நாடகக் கலையின் வளர்ச்சியிலிருக்கும் ஆர்வத்தையும் அறிந்திருப்பவர்களுக்கு, அவர்களின் நடிப்பின் திறத்தை எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. உயிரற்ற கதைகளையே நடித்துக் காட்டினால், யாவரும் பாராட்டக் கூடிய திறன் படைத்தவர்கள் இவ்வுயிருடன் கூடிய நாடகத்தை—கதையை நடித்துக் காட்டினால் அவர்களை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்? நம்மை உள்ளபடி அவர்கள் செங்குட்டுவன் காலத்திற்கே அழைத்துச் சென்று விட்டார்களென்றால் ஆச்சரியமில்லை. நாடகத்தின் பல கட்டங்களில் நாமும் சேர நாட்டிலே வாழ்கிறோமா என்று நினைக்கும் நிலையில் அவர்கள் நடிப்பு மிளிர்கிறது. வீரமும், ஆவேசமும் பார்ப்பவர்கள் உள்ளத்தில் நல்ல எழுச்சியை ஊட்டுகிறது. சகோதர வாஞ்சை அவர்கள் நடிப்பின்மூலம் யாவர் மனதையும் உருகச் செய்துவிடுகிறது. தமிழ் மொழிப் பற்றில்லாராயினும் இவர்களின் உணர்ச்சிமிக்க சொற்களை கேட்பாராகில் தன்னையறியாமலேயே தமிழ் மொழியின் மீதும் ஆர்வம் பெற்றுவிடுவார்கள்.

நகைச்சுவையும் போதிய அளவுக்கு இருக்கிறது.

செங்குட்டுவனாக நடிக்கும் தோழர் டி. கே. பகவதி அவர்களின் ஆவேசப் பேச்சுக்கள் மயிர் கூச்சலெடுக்கும்படி செய்கிறது. ஆனாலும் சற்று வேகத்தைத் தணித்துப் பேசினால், மக்கள் மனத்தில் இன்னும் அதிக உணர்ச்சியூட்டக்கூடும். ஒவ்வொரு சொற்களையும் உணர்ந்து உணர்வுபெற முடியும். மற்றபடி தோழர் பகபதி உணர்ச்சி பாவத்தோடு பேசுகிறார். அவரது நடிப்பில் சகோதரத்துவத்தின் முழுத்தன்மையையும் நன்கு காட்டுகிறார். படுத்திருக்கும்போது கனவு காணும் காட்சியும், அதன் பின் தம் மனைவியிடம் சொல்லுவதும், உண்மையான சகோதர வாஞ்சையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதாகும்.

கதையின் பிற்பகுதியின் அவரது நடிப்பு உச்சநிலையை யடைந்து விடுகிறது.

தோழர் ஷண்முகம் அவர்களின் நடிப்பும் மிகவும் பாராட்டக்கூடியது.

அடுத்தபடியாக தமிழ் மன்னனின் கொலு மண்டபத்திற்கும், ஆரிய மன்னனின் கொலு மண்டபத்திற்கும் வேற்றுமை காட்டப்பட்டிருக்கலாம். ஆரிய மன்னன் தன் அரச சபையில் தனியொரு மந்திரியுடன் புலம்பிக் கொண்டிருப்பதைவிட, வேறு மந்திரிகளும், சேனாதிபதிகளும், வீரர்களும் வீற்றிருக்குமாறு செய்திருக்கலாம். எந்த அரச சபையானாலும் அங்கும் சிலபேர்கள் இருந்துதானிருவார்கள். ஆகவே, தமிழ் மன்னனுக்கு நிகராகவே ஆரிய மன்னனையும் வீரம், பலம் பொருந்தியவனாக எடுத்துக் காட்டி அத்தகைய மன்னனை வெற்றி கண்டான் தமிழ் மன்னன் என்ற பெருமையை—எண்ணத்தை பார்ப்பவர்கள் மனத்தில் எழச் செய்திருந்தால் சிறப்புடையதாயிருக்கும்.

பொதுவாக கதையின் வசனமும் நடிப்பும் யாவரும் பாராட்டத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. சீன்களும், செட்டிங்குகளும், வர்ணஒளியும் கண்ணையும், கருத்தையும் கவரக் கூடியதாகவேயிருக்கிறது. நிழல் படம் ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடிய வகையில் திரைப்படம் பார்க்கிறோமா என்று நினைக்கும்விதத்தில் அமைந்திருக்கிறது.

காலத்திற்கேற்ப, மக்களின் தேவையையுணர்ந்து நாட்டுக்கு எது என்பதையறிந்து மொழிப்பற்றினையூட்டும் இத்தகைய நாடகங்களை நடிக்க முன்வந்த டி. கே. சகோதரர்களை நாம் உளமாரப் பாராட்டுகிறோம். தமிழ் மக்களின் ஆதரவு எவ்வளவுக்கெவ்வளவு இத்தகைய நாடகங்களுக்கு பெருகுகிறதோ அதற்கேற்றாற்போல் இத்தகைய நாடகங்களை நடிப்பவர்களுக்கும் கதைகளை எழுதுபவர்களுக்கும் ஊக்கமும் பிறக்க முடியும். ஆகவே தமிழ் நாட்டார் இத்தகைய நாடகங்களை நடிப்பவர்களுக்கும் கதைகள் எழுதுபவர்களுக்கும் தங்களின் ஒப்பற்ற ஆதரவைத் தந்து உதவியளித்து ஊக்குவிக்க வேண்டிக் கொள்கிறோம்.

M. M. V.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நாம் வாழ்வதாகக் கூறவும் வெட்கப்படுகிறோம்! ஆகையால்தான் நாட்டு மக்களிடையே நடமாடும் குருட்டுத்தனமான மூடப்பழக்க வழக்கங்களைப் போக்க பகுத்தறிவைப் பரப்பும் பணியில்ஈடுபட்டுள்ளோம்! பல நூறு ஆண்டுகளாக மக்கள் சமுதாயத்தில் படிந்து கிடக்கும் மாசைதுடைக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ளோம்! இதுவரை எவரும் போகத்துணியாதபயங்கர பாதையில், இலட்சியத்தைநோக்கி முன்னேறிசென்றுகொண்டிருக்கிறோம்! சிந்திக்கத் தெரியாது பொட்டுப் பூச்சிகளாக வாழ்ந்த மக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டுநாட்டைச் சிந்தனைக் கூடமாக மாற்றும் நற்பணியில் ஈடுபட்டிருக்கிறோம். "சுயமரியாதைக் காரன் விஷத்திலே புழுத்த புழு" என்று மக்கள் கருதி அலட்சியப்படுத்தி வந்த காலம் போய், சுயமரியாதைக்காரன்-திராவிடர் கழகத்தினன்-பகுத்தறிவுவாதிஎன்றெல்லாம் கூறிக்கொள்வதில் பெருமையடைய வேண்டிய அளவு இன்றைய நிலை மாறிக்கொண்டு வருகிறது. இந்த நிலை ஏற்பட நாம் பட்டகல்லடியும் சிந்திய ரத்தமும் அடைந்த துன்பமும் அளவிடமுடியாதவை. நமது பணி கோரிய பயனளிக்கத் தொடங்கி விட்டதைக் கண்டு, உழைக்காது உண்டுகொழுக்கும்உலுத்தக்கூட்டமும்,அவர்களுக்கு அடிவருடும்அரசாங்கமும் நம்மைக் கண்டு உறுமுகின்றன. நாம் நமது பயணத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டிருப்போம். நமது பணிக்குப் பரிசாக அரசாங்கம் சிறைக்கூடத்தை வழங்கும்! சமுதாயமோ தோழர் வேலாயுதத்திற்குக் கொடுத்தது போல சாவைப்பரிசாக வழங்கும். கவலையில்லை, சாவைத்தான் சமுதாயத்தால் பரிசாக வழங்க முடியுமானால் சாவே வா என்று வரவேற்போம்!

திராவிடம் வடநாட்டுத் தொடர்பில் இருக்கும்வரை, இந்தி இந்த நாட்டில் மீண்டும் மீண்டும் திணிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கும். 1938ல் இந்தியை ஒழிக்க ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சிறை சென்று, தாளமுத்து—நடராஜனைப் பலிகொடுத்து தமிழைக் காத்தோம். இம்முறையும் போர் புரிய முரசு கொட்டிவிட்டார் பெரியார். தமிழ் வெற்றி பெற்றே

[3ம் பக்கத் தொடர்ச்சி]

'பொற்காலம்' என்று சொல்லப்படுகிற பழைய காலச்சிறப்பாகும். இதற்கு மாறாக, 'நாகரீகம்', சுதந்தரம்', 'விடுதலை' என்ற கொள்கைகள் எல்லாம், 'கலிகாலம்' என்று சொல்லப்படுகிற தற்கால 'விபரீதங்கள்—கொடுமைகள்' என்றும் சொல்லப்படுகிறது. "காலம் வரவரக் கெட்டுப்போச்சு" என்கிற இந்தப் பேச்சில் ஏதாவது உண்மையோ, நியாயமோ, எள்ளளவாவது இருக்கிறதா? இருக்க முடியுமா? என்பதைச் சிறிது ஆராய்வோம்.

## புராண ஞானம்.

கலியுகம் என்கிற தற்காலம் ஆரம்பித்து 5050-வருஷங்களாகிறதாகப் பஞ்சாங்கம் சொல்லுகிறது. அதற்கு முன் பல ஆயிர வருஷங்கள் 'துவாபரயுகம்' என்றும், அதற்கு முன் அநேக ஆயிர வருஷங்கள் 'திரேதாயுகம்' என்றும் அதற்கு முன் அநேக ஆயிர வருஷங்கள் 'கிரேதாயுகம்' என்றும் கணக்குச் சொல்லி ஆதியுகத்தில் மனிதர்கள் எல்லோரும் தேவர்களாகவும், சிறந்த அறிவாளிகளாகவும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்தார்கள் என்றும், பின்னால் வரவர, மற்ற யுகங்களில் அந்த முதல் யுக மக்களின் சந்ததியார்கள் தங்கள் முன்னோர்களின் நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழிறங்கித் தற்போதுள்ள இழிந்த நிலைக்கு வந்திருப்பதாகவும், கலி முற்ற முற்ற இன்னும் மிகக்கீழான நிலைக்கும் போவார்கள் என்றும் இந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சித்தாந்தத்தின் உண்மையை ருசுப்படுத்துவதற்குச் சில உதாரணங்கள், நிதர்சனமாகவும், வஸ்து பூர்வகமானது போலவும் சொல்லப்படுகின்றன.

"இதோ இந்த மலையைப்பார். தனிப்பட்ட இக் குன்று எப்படி வந்தது என்று நினைக்கிறாய்? வாயு புத்திரனாகிய அனுமார், வடக்கேயிருந்து சஞ்சீவி மலையை அப்படியே எடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய் வரும்போது போகும் வேகத்தினால், பொடிந்து விழுந்த சிறு துண்டுகள். சிறுசிறு மலைகளாக இருக்கின்றன, அதில் ஒன்று இது."

"இதோ இந்த வெள்ளை மலையைப் பார். இது ஏன் முழுதும் சுண்ணாம்பாகவிருக்கிறதென்று நினைக்கிறாய் ?! சொல்லுகிறேன் கேள். இராவணன் சீதையைச் தூக்கிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் போனானல்லவா? அப்போது ஜடாயு என்ற பக்ஷிராஜன், இராவணனைத் தடுத்ததற்காக, அவன் வாளையுருவிச் சிறகுகளை வெட்டிக் கீழே வீழ்த்தினான். அந்த ஜடாயு விழுந்திறந்த இடம் இது! அதன் உடம்புதான் இந்தமலை; எலும்பின் முக்கிய தாதுப்பொருள் சுண்ணாம்பு என்பதை வெள்ளைக்காரனும் ஒப்புக் கொள்கிறானே! இனியாவது நம்பு"

"இதோ இந்த ஆற்றின் நடுவிலே பெரிய பந்துபோன்ற இச்சிறு குன்று எப்படி வந்ததென்று நினைக்கிறாய்? பாண்டவர் வனவாசஞ் செய்தபோது இங்கே தங்கியிருந்தார்கள். அவர்கள் மனைவி, துரோபதியம்மன் இவ்வாற்றில்தான் குளித்தாள். குளிக்கும்போது மஞ்சளை உருட்டிவைத்துப் பூசிக்கொள்வதற்கு முன், வெள்ளம் வர,அப்படியே மஞ்சள் உருண்டையை விட்டுவந்து விட்டாள். அது தான் இக்கல் உருண்டை."

"இதோ இந்த வானரத்தின் முகத்தைப்பார். வெந்து கரிந்து போனது போல, ரோமம் முளைக்காமல் ஏன் இருக்கிறது? வானரங்களின் முன்னோனாகிய அனுமார் குழந்தையாயிருக்கும்போது சூரியனைப் பழமென்று தாவிப்பிடித்துக் கடித்தது. அதனால் அதன் முகத்தில் இருந்த மயிரெல்லாங் கருகி வெந்து போயிற்று.. அதிலிருந்து வானரங்களின் முகங்களில் அந்த அடையாளம் இருந்து வருகிறது."

என்று இதுபோல இன்னும் பல உதாரணங்களைக் காரண காரியப் பொருத்தங் கொண்டது போலச் சரமாரியாகச் சாஸ்திரக்காரன் சொல்லும் போது ஆறடி மனிதன் கேட்டு ஆச்சரியமும், பயமுங்கொள்ளுகிறான். முன் காலத்தில் மனிதர்கள் மலையைச் செண்டுகளாக எடுத்து விளையாடவும், பனைமரத்தைப் பிடுங்கிப் பல்தேய்க்கவும், கடலைக் குடிக்கவும், சூரியனைப் பிடிக்கக் கூடிய அவ்வளவு சக்தியும், அதற்கேற்ற உடல் அமைப்பும் பெற்றிருந்தார்கள் என்று ஒப்புக்கொண்டபின், இப்போதுள்ளவர்கள் சாதாரணமாய் ஆறடிக்கு மேல் வளராமல், எவ்வளவோ குறைந்த சக்தியுடையவர்களாக இருப்பதிலிருந்து, இந்த மாறுதல், கலி காலத்தின் விபரீதம் என்று ஒப்புக்கொள்ள வேண்டியவனாகின்றான்.

அப்போது, நமது வைதீக தேசாபிமானிகள்,

"பாருங்கள் சகோதர சகோதரிக

தீரும். ஆனால் மீண்டும் அது பல ஆண்டுகளுக்குப்பின் தோன்றாதிருக்க வேண்டுமானால், திராவிடத்தை வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரித்தால்தான்முடியும்.நாவலர் பாரதியார்இனியாகிலும் இதையறிந்து, திராவிடநாட்டுப்பிரிவினை இயக்கத்துடன் சேர்ந்து பணியாற்றித் தமிழை என்றென்றும் பாதுகாப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

"புத்ததாசன்"

ளே! நம்முடைய முன்னோர்கள் பெருமையென்ன! திறமையென்ன! தற்காலம் நாமிருக்கும் நிலைமை என்ன! என்ன தாழ்ச்சி! என்ன வீழ்ச்சி! இந்தக் கேவலத்திற்கு நாம் ஏன் வந்தோம்? நாகரீகம் என்கிற வலையில் சிக்கி, நம்முடைய பழய வழக்கங்களையும், கொள்கைகளையும் கைவிட்டதனால் அல்லவா? நாம் மறுபடியும் உயர் நிலையை அடையவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? நமது முன்னோர்கள் கூறிய வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும். நாகரீக மோகத்திலிருந்து விடுபட்டு எளிய பழய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். மகாத்மா காந்தியைப் பாருங்கள்! அதர்மம் தலையெடுத்து சற்ஜனர்கள் துன்பப்படுகிற இந்தக்காலத்தில், நம்மெல்லோரையும் நல்வழியில் நடத்தி, நம்மையும் நமது நாட்டையும் பரிசுத்தப்படுத்தத் தோன்றிய அவதார புருஷர் என்பதில் என்ன சந்தேகம்? ஆகையால் அவரையும் அவரது சீடர்களையும் பின்பற்றுங்கள்''
என்று இதோபதேசம் செய்கின்றனர்.

மற்றும் ''பழைய காலம் மிகவும் மேலானது. காமதேனுவும் கற்பக விருக்ஷமும், மக்களுக்கு வேண்டியதைக் கொடுத்து உலகில் பசி, தாகம் இல்லாமற் செய்தது. மனிதர்களும் மிகுந்த பலசாலிகளாக நோயின்றி நூறு வருஷத்திற்கு மேல் வாழ்ந்தார்கள். பின்னால் வரவரக் காலம் கெட்டுப்போனது. இன்னும் வரவர ரொம்பக் கெட்டுப்போகும்'' என்ற முடிவுக்கே நம்முடைய சாஸ்திரங்களும் நம்முடைய பெரியோர்களும் வந்திருக்கின்றனர். காலத்தைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும் நம்முடைய ஆராய்ச்சியெல்லாம் மேற்படி கொள்கைக்குச் சாதகமாகப் புராணங்களையும், பழங்கதைகளையும் வியாக்கியானஞ் செய்வதோடு நின்று விட்டது. பாமர மக்களுக்கு ஆராய்ந்து பார்க்கும் பழக்கமே இல்லை. கைக்கெடியாரம் முதல் மோட்டார், ரயில் என்ஜின், ஆகாயவிமானம், ஆகாய வசனி முதலிய எல்லாம் காலத்திற்கேற்பக் கடவுளால் சிருஷ்டிக்கப்படுபவையென்று நம்பி வருபவர் அநேகர். ''நாகரிகப் படுகுழியில் நம்மைத்தள்ளுவதற்காகச் சைத்தானால் சிருஷ்டிக்கப்பட்டவை இவை'' யென்று நம்மில் சில விவேகிகள் இன்றும் சொல்லுகிறார்கள். ''இவைகள் என்ன பிரமாதம்?! நம்முடைய பெரியோர்களுக்குத் தெரியாமலிருந்ததா? ஞான திருஷ்டி யென்ன, திரிலோக சஞ்சாரமென்ன, அசரீரி சொல்வதென்ன, ஆகாய விமானங்கள் என்ன, இவைகளைப்பற்றியெல்லாம் நம்முடைய புராணங்களில் சொல்லப்படவில்லையா? இவற்றால் மனிதனுக்கு என்ன நன்மை என்று நினைத்து ஆன்ம ஞானத்தை வளர்க்க முயன்றனர்'' என்று விஞ்ஞானத்தையும் உலக சுகத்தையும் இழிவுபடுத்தி ஆன்ம ஞானத்தையும் பரலோக சுகத்தையும் பிரமாதப்படுத்திச் சொல்லுகிறவர்கள் சிலர்.

ஆனால்,

கலிகாலத்தைப்பற்றியும் பழங்காலத்தைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும், பழமையில் வெறுப்பும் புதுமையில் விருப்பும் இல்லாது, பகுத்தறிவு கொண்டு ஆராய்ச்சிப் புத்தியுடன் உண்மைகாண முயற்சிக்கும் அறிவியக்க வாதிகள் கூறுவதை இனிக் கவனிப்போம்.

## II.

முதலாவதாக, மனிதனின் பிறப்பிடமும், இருப்பிடமும், இறப்பிடமும் ஆகிய இந்தப் பூமியைப்பற்றியும் அதன் பிறப்பு வளர்ப்பு, அதன்வயது, அதன் பிற்கால நிலை, உயிர்களின் சிருஷ்டி வரலாறு, மனிதன் தோற்றம், வளர்ச்சி, மனிதன் பிற்கால நிலை இவற்றைப்பற்றியும், வான சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், பூதத்துவ சாஸ்திரம், ஜீவ தத்துவ சாஸ்திரம், மனித தத்துவ சாஸ்திரம், மனித வர்க்க சாஸ்திரம், தேக தத்துவ சாஸ்திரம், தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம் முதலான கலைகளைக் கொண்டு விஞ்ஞானிகள் (பெரும்பாலும் மேற்கத்திய மிலேச்சர்கள்)என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

### பூமியின் பிறப்பு.

எல்லையற்ற வான வெளியிலே, நாம் காண்கிற சூரியன், சந்திரன், நாம் வசிக்கும் பூமி, இந்தப் பூமியைப் போன்ற மற்ற கிரகங்கள் எல்லாம், இப்போது சுழன்று வருகிற இடம் முழுதும் அநேக கோடி வருஷங்களுக்கு முன்னால் அளவிட முடியாத அவ்வளவு உஷ்ணம் பொருந்திய மெல்லிய காற்று நிறைந்திருந்தது. அக்காற்றுக்கோளம் பம்பரம்போல் சதா சுழன்று கொண்டிருந்ததால், கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாகச் சூட்டை இழந்து வந்ததோடு, அளவிலும் சுருங்கி வந்தது. அளவிற் சுருங்கவும், அதற்குத் தக்கபடி சுழற்சியின் வேகம் அதிகப்பட்டது. வேகம் மிகுதிப்படவே, உருண்டையின் சுழற்சிக்கு ஆதாரமான இரண்டு கோடிகளிலும் சிறிது தட்டையாகவும், மத்திய வயிற்றுப் பிரதேசத்தில் சிறிது விரிவடையவும் ஆரம்பித்தது. பொருளுக்கியல்பாயுள்ள ஆகர்ஷணசக்தியின்படி உருண்டையானது தன் மய்யத்தை ஒட்டி இறுகவும், ''நடுவிற் பிரியும் சக்தி''யினால் மத்திய பிரதேசத்தில் அகன்று விரியவும் ஏற்பட்டது. இவ்விரண்டு சக்திகளில் ஆகர்ஷண சக்தி அதிக பலமுள்ளது. கனமும் நெருக்கமும் கொண்ட காற்றுக்கள்ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு உருண்டை இறுக இறுக, உருண்டையின் மத்திய ரேகையைச் சுற்றி, ஒன்றின் மேல் ஒன்றாகப் பல காற்று வளையங்கள் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட காற்று வளையங்களில் உள்ள கனமான காற்று மெல்லிய காற்றுகளை ஆகர்ஷண சக்தியால் இழுத்துக்கொண்டு சுழற்சியின் வேகத்தால் உருண்டையாகி; இறுகி, தாய் உருண்டையைப் போலத்தானும் தன் வடமுனை தென்முனைகளைப்பற்றி அச்சு ஏற்படுத்திக் கொண்டு சுழல வாரம்பித்தது. முன் வளையங்கிடந்த பாதையில், சுழன்று கொண்டே தாயுருண்டையைச் சுற்றி ஓடிவரத் தொடங்கியது. இரண்டுவித அசைவுகளுடன், இன்னும் காற்று வடிவிலேயே உள்ள இந்தச் சிறிய உருண்டை, மேற்கூறிய ஆகர்ஷண சக்தி செண்ட்ரிபியூகல் சக்திகளின் இயக்கத்தினால், தானும் ஒரு வளையத்தைப்பெற்றது. இவ்வளையத்திலிருந்து அதிலுஞ்சிறிய குட்டியுருண்டை தோன்றி அதுவும் சுழற்சி நிலையில் தன் தாயுருண்டையைச் சுற்றி வரலாயிற்று. மேலே சொன்ன மூன்று உருண்டைகளில் முதலில் சொல்லிய பெரிய உருண்டை தான் சூரியன். அதிலிருந்து பிரிந்து தோன்றியது பூமி, அதிலிருந்து (பூமியிலிருந்து) பிரிந்தது சந்திரன்.

சூரியகோளத்திலிருந்து விடுபட்ட காற்று வளையங்கள் பலவற்றில், பூமி தோன்றிய வளையம் மூன்றாவது வளையமாகும். சூரியனுக்கு அடுத்து நின்ற வளையத்தில் புதனும், அதற்கடுத்த வளையத்தில் வெள்ளியும், அதற்கடுத்து பூமியும், அதற்கடுத்து செவ்வாய், அப்புறம் வியாழன், அதன் மேல் சனி, அப்புறம் உரானஸ், அப்புறம் நெப்தியூன் ஆக எட்டு வளையங்களில் 8 உருண்டைகள் ஏற்பட்டு எல்லாம் சூரியனைச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டு சுழன்று வருகின்றன. செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் அஸ்டிராய்ட்ஸ் என்று 500க்கு மேற்பட்ட சிறு உருண்டைகள் சேர்ந்த ஒரு தொகுதியும் இருக்கிறது. இந்தத் தொகுதியில் உள்ள சிறு உருண்டைகள் ஒரு பெரிய உருண்டையின் சிதைவுகள் என்று கருதப்படுகிறது. பூமி உருண்டை ஏற்பட்ட முறைப்படியே மற்ற கிரகங்களும் அதே சமயத்தில் தோன்றின; பூமிக்குப் போலவே மற்ற கிரகங்களுக்கும் சந்திர உருண்டைகள் உண்டு. இவைகள் எல்லாம் சேர்ந்த இடம் சூரியமண்டலம் என்பது.

சூரிய உருண்டையின் குறுக்களவு 8 லட்சத்து 65 ஆயிரம் மைல். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் 9 கோடி 30 லட்சம் மைல். நமது பூமியின் குறுக்களவு தென்வடலாக 7926 மைல் 1041 கஜம். கிழமேலாக 7899 மைல் 1023 கஜம். சந்திர உருண்டையின் குறுக்களவு 2160

# எவர் பிராமணர்?

★

இவ்வுலகின் கண் மக்களாய்ப் பிறந்தார் யாவரும் தத்தம் கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்திருத்தலினால் உயர்ந்தோராகக் கருதப் படுகின்றனரேயன்றி, பிறப்பின் ஏதுவாக உயர்ந்தோரெனக் கருதப்படல் யாண்டுமிலர். அங்ஙனமன்றிப் பிறப்பின் ஏதுவாலேயே ஓரினத்தாரை ஏனையோர் உயர்ந்தோரெனக் கருதி, அவர்கட்கு வந்தனை வழிபாடுகளியற்றிக் குற்றேவல் புரிந்து வருகின்றனரென்றால், அவர்களை மக்களென்னாது மக்கட் பதடிகளென்றலே சாலவும் ஏற்புடைத்தாகும்.

இத்தகைய அறிவற்ற அடிமை மனப்பான்மை கொண்ட ஒரு நாடும் இற்றைஞான்றுளதோவென்றையுறுவார்க்கு, நம்மிந்தியத்துணைக் கண்டம்—சிறப்பாக நந்தமிழ் நாடு அதற்குப் போதிய சான்றாக நின்று நிலவுகிறதென்றால் அது பொய்யுரையாகாது, மெய்யுரையேயாம்.

காட்டு மிராண்டிகளாய்த் திரிந்து வயிறு வளர்த்து வந்த நாடோடி ஆரியப் பார்ப்பனர், நம் நாட்டு வளத்தினைக் கண்டு ஈண்டடைந்து, நம் மூதாதையரால் ஆதரிக்கப்பட்ட ஒரு நயவஞ்சகக் கூட்டத்தார், ஜாதி பாகுபாடு மத பாகுபாடு வகுத்து, நம் முன்னோரின் பகுத்தறிவை உருத்து, அவர் தமக்குள் பெரும் பிளவுகளை யுண்டாக்கித் தம்மவரை 'பிராமணர்' என்றும், ஏனையோரை 'சூத்திரர்' என்றும் ஏற்றத் தாழ்வு கற்பித்து, அன்று முதலின்று வரை அவற்றை நடைமுறையிலும் கொண்டு வந்திருக்கின்ற சூழ்ச்சித் திறனை உன்ன உன்ன உளங்கொதிக்கின்றது; அத்துடன் நம் ஏழ்மையை நினைக்க நினைக்க நெஞ்சம் இடிகின்றது.

புறத்தே பூணூலும் உச்சிக் குடுமியும், அகத்தே காழ்ப்பேறிய கபடத் தன்மையுங் கொண்டு, தம்மைப் பிராமணர்—உயர் ஜாதியினர் என்று, ஏய்த்துப் பிழைத்து வந்த இக்கேடர்களை, அஞ்ஞான்றிருந்த ஆரியப் பெருமக்களே மனம் பொறாது மிக வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். ஆயின் "ஞானினோ துர்லபா லோகே கர்மிண: கோடி கோடய:" என்ற சிவஞான தீபிகையாரின் கூற்றுக் கேற்ப, அறிஞர்கள் அருமையாகவும் கன்மிகள் மிக்குமுள்ள உலகில், அவர்தம் கண்டனவுரைகள் மக்களிடையே பரவ ஏதுவின்றிப் பாழ்த்ததால், பிற்காலச்சந்ததியாராயினு முணர்ந்து உருப்பட வேண்டி, ஏடுகளிற் பொறித்து வைத்துப் போயினர். அவற்றுள் 'பிராமணர்' என்ற சொல்லின் இலக்கணத்தை விளக்கும் சுலோகங்கள் சில வற்றை மட்டும் ஈண்டு எடுத்துக்காட்ட விழைகின்றேன்.

"ப்ரஹ்மணி நிஷ்டாவான்
ப்ராஹ்மண:"

அதாவது 'பிர்மமத்தினிடத்தில் நிஷ்டையோடு கூடினவன் பிராமணன்' என்பதாம்.

"தைலதாரா மிவாச்சின்னம்
தீர்க்க கண்டானி நாதவத்
அவாச்யம் ப்ரணவஸ்யாக்ரம்
யஸ்தம் வேத ஸவேதவித்"

இது உத்தரகீதையில் கண்ணன் காண்டீபனுக்குக் கூறியதாகும். இதன் பொருள்:—மணியடித்தவுடன் இடை விடாமற் கேட்கும் நாதம் போலவும், தைலத்தை ஒழுக்கினால் இடையறா தொழுகும் ஒழுக்குப் போலவும், இடையீடின்றி ஜ்வலித்துக் கொண்டிருக்கின்ற நாதமொன்றுண்டு, அதுவே பிரணவநாதமாகும்; அந்நாதத்தை எவனறிகின்றானோ அவனே வேதத்தையறிந்தவன், அதாவது வேதியன் (பிராமணன்) எனப்படுவன்" என்பதாகும்.

மேலும் பிர்ம்மோபநிடதம் கூறுவதையும் காண்போம்.

"யதக்ஷரம் பரம் பிர்ம தத்சூத்ர
மிதிதாரயேத்
யஸ்மின் ஸர்வ மிதம் ப்ரோதம்
சூத்ரே மணிகணா இவ.
தத்சூத்ரம் விதிதம் யேன
ஸவிப்ரோ வேத பாரக:"

"கயிற்றில் மணிகளெனப் போல், உலகம் கோப்புண்டு கிடக்கும் அழிவற்ற பிர்மமாகிய கயிற்றை யறிந்தவனே வேத பாராயணத்தோடு கூடிய விப்ரன் (பிராமணன்) ஆவான்" என்பதே இதன் பொருள்.

மேற்கூறிப்போந்த சுலோகங்களிலிருந்து யோக நிஷ்டையோடு கூடினவராய், அறிவில் பரப்பிர்மத்தை யறிந்தானந்திக்கின்றவரே, எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் உண்மையானபிராமணரென்பதும், ஏனை மடிசஞ்சியும் பூணூலும் உச்சிக்குடுமியுங் கொண்டு திரியும் பார்ப்பனர் பிராமணராகாரென்ப

---

மைல். பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் 2 லட்சத்து 38 ஆயிரம் மைல். சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றிவர, 29 நாள் 12 மணி 44 நிமிஷங்கள் பிடிக்கிறது. பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர, 365 நாள் 5 மணி 49 நிமிஷம் 12 சகிண்ட் பிடிக்கிறது.

இவ்வாறு திட்டவட்டமான கணக்குகளுடனும், தூரதிருஷ்டிக்கண்ணாடி கொண்டு பிடித்த புகைப்படங்களுடனும், வானவெளியில் பூமியின் தோற்றத்தையும், அதன் இயக்கத்தையும் பற்றிச் சொல்லுவது வான சாஸ்திரம். பூமியையும், சந்திரனையும், சூரியனையும், சேர்த்துக் கிரகங்களாக்கி அவைகளுக்கு வீடு, ஜாதி, முதலியன கற்பித்துச் சோதிடத்திற்குத் துணையாக உள்ள நம்மவர்களுடைய வான சாஸ்திரம் வேறு.

### அணுவும் அதன் ஆராய்ச்சியும்.

அகண்டிதமான வான வெளியைப் பற்றியும், அதிலுள்ள பிரமாண்டமான சூரியன் பலத்தைப்பற்றியும், அதிலுள்ள புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் முதலிய கிரக மண்டலங்களைப் பற்றியும் வான சாஸ்திரிகள்ஆராய்ந்து வருவதுபோல, உலகத்தில் உள்ள பல்வேறு தாதுப்பொருள்களின் தன்மை, அவற்றின் சேர்க்கை, அவற்றின் பகுதிகள் முதலியவற்றைப்பற்றியஆராய்ச்சியை இரசாயன சாஸ்திரிகள் ஆராய்ந்து வருகின்றனர். உலகத்திலுள்ள தனிப்பொருள்கள் 92 என்றும், இதர பொருள்கள் அனைத்தும் இவற்றின் பல வகைப்பட்ட கலவைத் தோற்றம் என்றும், தனிப்பட்ட 92 மூலப் பொருள்களின் வேற்றுமையானது, அவற்றின் அணுச்செறிவின் தன்மையால் ஏற்படுவதேயன்றி எல்லா மூலப்பொருள்களின் அணுக்களும் ஒரே தன்மையுடையன வென்றும், அணுவின் கருப்பொருள் (நியூக்ளியஸ்) இன்ன தன்மையென்றும் அதைச்சுற்றியுள்ள, எலக்ட்ரான், ப்ரோட்டான், நியூட்ரான் சக்திகளைப்பற்றியும், பேரண்டத்தில் நிகழ்வதை வான சாஸ்திரம் கூறுவதுபோல பேரண்டத்தின் பிண்டத்தின் பிண்டமான அணுவின் நிகழ்ச்சியை விஞ்ஞானத்தின்வேறோர் கலையான ரசாயன சாஸ்திரம் மிகவும் நுட்பமான, விந்தையான ஆராய்ச்சி செய்து வருகிறது. (தொடரும்)

தும் போதருகின்றது.

இதுபற்றிப் பெரியாரவர்களும் பிராமணர் என்றெழுதாமலும் கூறாமலும் பார்ப்பனர் என்றே எழுதும்படியும் கூறும்படியும் கட்டளையிட்டிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும்.

இப்போலி வேடத்தைக் கண்டிக்கப் புகுந்த பிர்ம்மோபநிடதம்

"அக்நேரிவ சிகானான்யா
யஸ்யஞ்ஞானமயீ சிகா
ஸசிகித் யுச்யதே வித்வான்
நேதரே கேச தாரிணா:"

எனக்கூறுகிறது. இதன் பொருளாவன நெருப்புக்கு அதன் ஜ்வாலையே குடுமியாகும்; இதே போன்று எவனுக்கு ஞானமாகிய குடுமியிருக்கிறதோ அவனே உண்மையான குடுமியுள்ளவன்; அவனே வித்வான்; வெறுங்குடுமி மட்டும் வைத்துள்ளவன் போலிக்குடுமிக்காரன்", என்பதாகும்.

"ப்ஹி: சூத்ரம் த்யஜேத் புத:"

இதுவும் பிர்ம சூத்ர சலோகமே. "அறிவுள்ளவன் பூணூலணிதலை நீக்கல் வேண்டும்" என்பதே இதன் பொருள்.

"சிகாயஜ்ஞோ பவீதாப்யாம்
பிராமம்ணா நைவ நைவச"

உச்சிக் குடுமியும் பூணூலு மணிபவன் பிராமணனாகான் ஆகான் என்று சிவஞான தீபிகை கூறுகிறது.

பிற்காலத்தில் சங்கித சாகித்ய கர்த்தாவாகிய தியாகராஜ ஸ்வாமிகளும், தாம் ஓராரியராயினும், தம்மினத்தவரின் தீச்செயல்களைக் கண்டிக்கா தொழுக்கினாரில்லை. "இக்காலத்தில் பிராமணர்களென்பவர்கள், பரத்தையர்களைத் துதித்தும், அன்னபானாதிகளால் மகிழ்வித்தும், அல்லும் பகலும் அனவரதமும் அவர்களோடு ஸரஸ ஸல்லாபங்கள் புரிந்து விளையாடுகிறார்கள்; எனவே பிராமணத்துவம் போய்விட்டது; நீசர்கள் பெருகினர்; பிர்மசம்பந்தமான வெற்றுரைகள் பகர்ந்து கொண்டு ஏமாற்றித் திரிகிறார்கள்" என்று ஸரஸீருகானன என்ற கிர்த்தனையில் மிகவும் புண்பட்ட மனதோடு புலம்பியிருக்கின்றார். அமரகவி பாரதியாரும் "பேராசைக்காரனடா பார்ப்பான்"........என்று மிக்க வன்மையுடன் கண்டிக்கின்றார்.

போலி வேடதாரிகள் பலரிருப்பினும் தாம் பூண்ட வேடத்துக்கேற்ப நடித்தாவது காட்டுகிறார்கள். புறநட்டகம் வேர்க்கும் நச்சுப் பகைமையுடைய பார்ப்பனரோ, "பிராமணர்" என்ற பெயருக்குப் பெரிதும் புறம்பானதும், பஞ்சமா பாதகச் செயல்களிற்றலையாயதுமான கொலை, சதி முதலான கொடுங் குற்றங்கட்குறைவிடமாயிருந்தும், இருந்து கொண்டுமிருக்கின்றன ரென்பதை எண்ணுங்கால், அம்மம்மா! என் னெஞ்சம் துணுக்குறுகின்றதே.

தவஞ்செய்த சம்பூகன் தலையறுபட்டான். வேள்வியால் உயிர்கள் வதைக்கப் படுவதைக் கடிந்த புத்தர் பெருமான் தம் மதத்தோடும் நாடு கடத்தப்பட்டார். ஆதனூர் நந்தனும், அருட்ஜோதி வள்ளலும் எரியுட்டப்பட்டனர். ஜாதிமத பேதங்களையும், யாகம் விக்ரகாராதனாதி கன்மங்களையும் கண்டித்து சமூக சமயச் சீர்திருத்தம் செய்யப் புகுந்த கேரளப் பெரியார் சுவாமி பிர்மானந்தர் பல இன்னல்களுக்குள்ளாயினர். "இவை யாவும் இறந்தகால நிகழ்ச்சிகள்; இன்றுண்டோ" வென இயம்புவார்க்கு, அண்மையில் நிகழ்ந்த உலகப்பெரியார் காந்தியார் கொலையே போதிய அத்தாட்சியாகும். "தொழுதகையுள்ளும் படையொடுங்கும்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கும், "நலவிச்சை கல்லாமற்பாகம்படும்" என்ற பழமொழியார் கூற்றுக்கும் எடுத்துக் காட்டு இதனினும் பிறிதொன்று வேண்டுங் கொல்? பிராமணர் எங்கே! பார்ப்பனர் எங்கே!! எவர் பிராமணர்?

சு. முருகேசன்.

## இரண்டும் ஒண்ணுதான்.

இரண்டும் ஒண்ணு மாதிரி உலகத்திலே எத்தனையோ இருக்கத்தான் செய்கிறது. ஓடுகிற ரயிலும் ரயில் தான். நம்ம வீட்டுச் சின்னத்தம்பி நெருப்புப் பெட்டிகளைக் கயிற்றில் கோத்து இழுத்துக் கொண்டு அதையும் ரயில் என்றுதான் சொல்லுகிறான்.

அஸ்ஸாம் மாகாண உணவு மந்திரி மக்களுக்கு உணவு போதாமல் கஸ்டப்படுகிறார்களே என்று தானும் உண்ணாவிரதம் இருந்தாராம், அவரும் மந்திரி தான். நமது மாகாண மந்திரி தன்னுடைய நெற்குவியலுக்கே சரியான கணக்குக் காண்பிக்காமல் ஏதேதோ கணக்குச் சரிக்கட்டினாரே அவரும் மந்திரிதான்.

உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் கொல்லப்பட்டாரே அதுவும் கொலைதான். அதே ஊரில் ஒரு அய்யர் விஷமுண்டு மாண்டாரே அதுவும், மகாத்மா சுடப்பட்டாரே அதுவும் கொலைதான்.

இந்த நாட்டைப் பதினாறு வருடம் அரசாண்டதே அதுவும் ஒரு ஜோடி செருப்புத்தான், சீனாவில் 500 லக்ஷம் டாலருக்கு வாங்கப்படுகிறதே அதுவும் ஒரு ஜோடி செருப்புத்தான்.

நமதுநாட்டில் வேலை சிக்கினாலும் கூலி சிக்காமல் கஷ்டப்படுகிறார்களே இதுவும் பஞ்சந்தான், சீனா போன்ற நாட்டில் பணம் இருந்தும் பண்டம் கிடைக்காமல் இருக்கிறதே அதுவும் பஞ்சந்தான்.

இங்குள்ள ஆரியத்துக்கு அஞ்சித் திராவிட கழகத்துக்கும் விடுதலைக்கும் வாய்ப்பூட்டுப் போடுகிறார்களே அதுவும் பயந்தான், ஜவகரின் மிரட்டலுக்குக் கோவை முதலைகள் பத்து லட்சத்தைப் பாராமல் கொடுத்ததே அதுவும் பயந்தான்.

சென்னை ஓட்டல் ஒன்றில் ஒரு முஸ்லிம் வாலிபரும் ஒரு பெண்ணும் விஷமுண்டு இறந்து கிடந்தனரே அவர்களும் காதலர்கள் தான், மகா விஷ்ணுவைக் கண்டு மோகமுற்ற சிவன், அவரைக்கூடிப் பிள்ளை பெற்றாரே அவர்களும் காதலர்கள் தான்.

ஒரு ஊரில் சாமியார் ஒருவன் செம்பைத் தங்கமாக்குகிறேன் என்று ஏமாற்றி ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொள்ளையடித்தானாம் அதுவும் திருட்டுத்தான், நமது ஊர் ஆற்றோரத்தில் ஒரு அய்யர் வேஷ்டி, செருப்பு, குடை, அரிசி, காய்கறி, தட்சணை முதலியவைகளை, மோட்ச லோகத்துக்கு அனுப்புகிறேன் என்று வாங்கிச்செல்லுகிறாரே இதுவும்திருட்டுத்தான்.

அட! ரெண்டும் ஒண்ணுன்னு எப்படிச் சொல்லலாம்? என்ன இருந்தாலும் பெரியவா பார்த்து வச்சதைக் குறைகூறலாமோ! சுத்த சூனா மானாவா இருக்கியே! என்ன இருந்தாலும் பெரியவா பெரியவாதானே! மகாத்மாவை உயிருண்டாக்க ஒரு சாமியாரை நம்ம டாக்டர் அளகப்பா டில்லிக்குக் கூட்டி போனாரே, அதைப் பார்த்துப் பைத்தியக் காரத்தனமென்று சொல்லலாமோ' என்ன இருந்தாலும் ஒண்ணுன்னு என்னமாச் சொல்லலாம்!

"தூண்டில்"

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE

ரோஜா முத்தையா